ஆனந்தவிகடன்

V 6 No 14 6 April 1933

JL
O:M211, N28KN
N33.6.14
189147

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6.] 1933 ௵ ஏப்ரல் ௴ 6௳ [No. 14

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 260
2. வில்லிபாரத விளக்கம் (சூதுபோர்ச் சருக்கம்) T. S. நடராஜப் பிள்ளை B.A.,B.L. 263
3. தேவகி (ஓர் நாவல்) K. இராஜகோபாலன் 264
4. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 9-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 266
5. திருக்குறள் நீதி (பொருட்பால்-ஒழிபியல்) A. இராமலிங்கம் 267
6. நான் கண்ட உலகம் - P. இராமாநுஜன் 268
7. அப்பர் (64 கலைகள்-வியாகரணம்-முற்றியலுகரம்) E. N. தணிகாசல முதலியார் B.A.B.L. 270
8. தமிழ்ப் பாடம் (நளவெண்பா - கலிநீங்கு காண்டம்) 271
9. யாப்பிலக்கணம் - கலிப்பா. வித்துவான் M. V. வேணுகோபாலப் பிள்ளை 273
10. காற்று மழை (அங்கம் 1. களம் 2.) Sbakespear's - Tempest 275
11. சொல்லூடாட்டம் 14. 276
12. வர்த்தமானம் 279

## கலாநிலயம்

### விற்பதற்கே வேண்டும் விலை 3.

189147

இப்பொழுது இவ் "வெள்ளைக் காகிதத்தின்" விலை என்னஎன்ன வென்று கேட்டுக்கொண்டிருக்கின்றனர். இவ் வெள்ளைக் காகிதத்தைக் கண்டு கண்டு கருகுகின்ற வர்த்தமானப் பத்திரிகைகள் கணக்கில. இதுபற்றி நெரித்த புருவத்தோடு தம் 'அபிப்பிராயங்களை'ச் சொல்லிவருபவர் இன்னுஞ் சோர்வடையவில்லை. வட்டமேசைகளிலிருந்து விரிந்துவந்த இவ் வெள்ளைக் காகிதம் எதனை நமக்குக் கொடுத்திருக்கின்றதோ, இன்னும் எதனை நமக்குக் கொடுக்கவேண்டுமோ, அல்லது உண்மையில் எதனைத்தான் கொடுக்க இயலுமோ என்பதை அறிவுடையோர் ஒருவரும் ஒருநாளும் அறியமாட்டார்.

என்னதான் வேண்டும் எமக்கு? யார் பெரியவர்? பெரியோர் உரையோ அல்லது ஏனையோர் செய்கையோ நம்மைச் சீர்படுத்தவல்லது? இவைகளைத் தெளிந்துகொள்ளவேண்டும் என்னும் நினைவு எழுவது அருமையாயிருக்கின்றதேயன்றி, மாநுட வாழ்க்கையின் உயிர்நிலையாகிய அவ்வெண்ணம் எழுமாயின் பிறகு இவைகளைத் தெளிந்துகொள்வது யாதும் அருமையன்று.

இந்து மதத்தின் மரபின்படி வழங்கிவரும் வாழ்த்து, "சாந்தி, சாந்தி, சாந்தி" என்பதே. இஸ்லாமிய மதத்தின் வாழ்த்தாகிய "ஸலாம்" என்பதும் அன்னதோர் நோக்கத்தையே யுடையது. "Peace be unto thee" என்னும் கிறிஸ்தவ வாழ்த்தும் வேறொன்றும் வழங்குவதில்லை. மாபெரும் சமயங்கள் இவ்வை மூன்றும், மனிதனுக்கு உண்மையில் உதவுவதல்லது "சாந்தியே" என்பதை ஒரு வாயால் உரைக்கின்றன: மற்ற மதங்களின் சரித்திரங்கள் ஒருபுறமிருக்க, இந்திய மதமோ இச் சாந்திக்கு இயன்றபடியே வாழ்க்கை முறையை அமைத்திருந்தது. ஆதலின், "என்ன தான்வேண்டும் எமக்கு" என்னுங் கேள்வி சிந்தனையில் எழுமாயின், "எங்களெங்கள் மதங்களின் முதல்வர் எமக்கு நல்லதென்று எடுத்தியம்பியிருக்கின்ற அச் சாந்தியே வேண்டும், மற்றவொன்றும் வேண்டா எமக்கு" எனப் பதிலுரைப்பதல்லால் வேறு சில இயம்புதற்கு இயலாதே. காகிதக் கற்றைகளுக்கு, அவை எந் நிறத்தனவாயினும், இந்நோக்கமேனும் நலமேனும் உண்டோ! சமயாசாரியர்களெல்லாரும் நமக்கு வேண்டுவது சாந்தியென்று கூறியிருக்க அதற்கு வேறாகவும் மாறாகவும் இவ் வெள்ளைக்காகிதக்காரர் விளம்புவது கேட்டுச் சிரிக்கமாட்டாதார் நிலைமை மிகவும் பரிதற்குரியதே. வெள்ளைக் காகிதங்களும் இவையனைய சீர்திருத்தங்களும் மனிதர் மனத்திற்குச் சாந்தியளிக்கும் தரத்தன வென்றேனும், அல்லது அந்நினைவைத்தான் கொண்டுள வென்றேனும் சொல்லத்தான் துணிபவர்களை எங்குங் காண்கிலம். துணிவரேல், வெளுத்து வெளுத்துக் கிடக்கின்ற இங்கிலாந்து அமெரிக்கா முதலிய நாடுகளில் சாந்தியென்பது சற்றேனும் அற்றுநிகழ்கின்ற செய்திகள் அனைத்தும் அவர் முகத்தில் வெறித்து வெறித்து விழிக்குமே. மற்று, "நம் கிராமங்களில் 'மின்சார அபிவிர்த்தி' அவசியம் வேண்டுமென்று கூறுகின்றவர், நம்முடைய ஆசையெல்லாங் கடந்து மின்சாரப் பெருக்கெடுத்திருக்கின்ற அமரிக்காவில் நாளொன்றிற்கு ஆறுபேர் வீதத்திற்குக் குறையாமல் தற்கொலை

செய்துகொள்கின்ற செய்தியை மறந்து விடுகின்றார்களே. தற்கொலை செய்துகொள்ள வேண்டுமென்று எண்ணுகின்றவர்களனைவரும் செய்து கொள்வதில்லை. பத்து லக்ஷம் பேர் நினைப்பார்களாயின் ஒருவன் செய்து முடிக்கலாம். எனின், இத் தற்கொலைகள் மட்டுமே, சாந்தியின்மையை எவ்வாறு அளந்து காட்டுகின்றதென்பதை எளிதில் உணரலாமே. நம்முடைய வியாபாரம் வளரவேண்டுமென்பவர், கோபம் என்பது ஒருபோதும் கொண்டறியா ஏசு கிறிஸ்து, வியாபாரிகளைச் சினந்து ஜருஸலேம் கோவிலிலிருந்து அடித்துத் துரத்திய சரிதையையும் மறக்கலாமோ.

வேண்டுவது சாந்தியொன்றேயாயின், இனி, யார் பெரியவர் என்னுங் கேள்வி தானே விடைபெற்றுக் கொள்கின்றது. சாந்தியின் செம்மையை உணர்ந்தோர் பெரியோர், அஃதுணராதார் அல்லாதார்—அவ்வளவே. இதன்மேல் எவ்வளவு உரைத்தாலும் மீண்டும் மீண்டும் இவ்விலக்கணத்திற்கே வந்து இயையும். கல்வியின் மலையேறி அறிவின் சிகரத்தில் வீற்றிருப்பார் பெரியோர். அவர் காண்பதே உண்மையாய காட்சி. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் இருந்த லாட்டின் புலவர் லுக்ரீட்டியஸ் (Lucretius) எனபவர்,

How sweet to stand, when tempests tear the main,
On the firm cliff, and mark the seaman's toil?
Not that another's danger soothes the soul,
But from such toil how sweet to feel secure!
How sweet, at distance from the strife, to view
contending hosts, and hear the clash of war!
But sweeter far on Wisdom's height serene,
Upheld by Truth, to fix our firm abode;
To watch the giddy crowd that, deep below,
Forever wander in pursuit of bliss;
To mark the strife for honours, and renown,
For wit and wealth, insatiate ceaseless urged,
Day after day, with labour unrestrained.

என, பன்னப் பன்னப் பயன்தரும் பாசுரங்கள் பாடியிருக்கின்றார். இதற்கிணையாகப் பௌத்தர்தம் நூலினும் பின்வரும் விழுமிய வாசகத்தைக் காணலாம்.

When the learned man drives away vanity by earnestness, he, the wise, climbing the terraced heights of wisdom, looks down upon the fools; free from sorrow he looks upon the sorrowing crowd, as one that stands on a mountain looks down upon them that stand upon the plain.

—The Dhammapada—Translation by
F. W. MaxMuller.

இவ்வண்ணம் கலக்கமில்லா உயரத்தில் தாம்நின்று அலைகின்ற உலகத்தின் அவலத்தை உற்று நோக்கி, "மானுடர்காள், உமக்கு உறுபொருள் உரைக்கின்றோம், கேண்மின்" எனப் பேசுவோரே பெரியோராவார். அன்னவர்களில்,

Look round the habitable world, how few
Know their own good; or knowing it pursue.
How void of reason are our hopes and fears!
What in the conduct of our life appears
So well design'd so luckily begun,
But, when we have our wish, we wish undone.

என விளம்பிய ஜூவினல் என்னும் லட்டீன் புலவரும் ஒருவராவார். இவரே பின்னரும்,

So much the thirst of honour fires the blood;
So many would be great, so few be good.
For who would Virtue for herself regard,
Or wed, without the portion of reward?
Yet this mad chase of fame, by few pursu'd
Has drawn destruction on the multitude

எனச் செப்பியுள்ள செம்மையைச் சிந்திக்கவல்லவர் வெள்ளைக் காகிதத்தின் விலை யென்னவென்று கேட்கத்தான் புகுவாரோ. ஆதலின், இவ் வித்தகர்,

The path to peace is virtue: what I show,
Thyself may freely on thyself bestow:
Fortune was never worshipped by the wise;
But, set aloft by fools, usurps the skies

என்று எடுத்தியம்பும்போது 'வாழி ஜூவினல்' என்று அப்பெரியாரை நாம் வழுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம். வேண்டுவதெல்லாம் சாந்தியே என்று இவரும் விளம்புகின்ற இம் மெய்ம்மை நினைவினிற் கொள்ளற்குரியது.

வேண்டுவது சாந்தியே என்று விளம்புகின்றார் பெரியோர்; இதனை விளம்புவதற்குரிய சிந்தனை இருத்தலால் அன்னோர் பெரியோரும் ஆகின்றார். இவர்தம் உயரிய உரைகளை உட்கொள்வதாலோ அல்லது ஏனையோர் செய்கின்ற சீர்திருத்தங்களாலோ நாம் சாந்தியடைவோம்? இக் கேள்வியே மிகையெனில் அதற்கோர் விடையளிப்பது அதனினும் மிகை. பெரியோரைப் பேணிக்கொண்டாலன்றி மானுடப் பேதைமை தீராது. பேதைமை யுள்ளவரையில், தாயுமானவர் இங்கும், மாத்யூ ஆர்னல்ட் அங்கும் சொல்லும் வண்ணம் ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றி அல்லலுக்கே இரையாகிக் கிடக்கவேண்டும். இன்னவர்தம் ஒரு சொல்லுக்கு ஈடாகுமோ ஆயிரம் ஆயிரம் வெள்ளைக் காகிதங்கள். மலையிலக்காகப் பேருரைகள் இவையிருக்க, இத்தனைக்கும் மாறாக நம்மையேன் இப்படி அலைப்புறுத்துகின்றனர் சிலர் என்னும் ஐயம் தோன்றலாம். பொதுஜனத் தலைவர்களென்று விவகரிக்கும் "இச்சீர்திருத்தகாரர்கள் பேரும் புகழும் வாய்ந்தவர்களாயிருக்கின்றனரே. இவர்கள் உரைப்பதும் உழைப்பதும் எல்லாம் பிழையாகவா இருக்கும்?" என்று பலர் கேட்கின்றனர். இதற்குப் பதிலாக,

Speciosites are Specious—ah me!—a Cagliostro, many Cagliostros, prominent world--leaders, do prosper by their quackery, for a day. It is like a forged bank-note; they get it passed out of *their* worthless hands: others, not they, have to smart for it. Nature bursts-up in fire-flames, French Revolutions and such like, proclaiming with terrible veracity that forged notes are forged.

என்று தாமஸ் கார்லைல் கூறியிருப்பதை நினைவிற் கொண்டால் போதுமே.

ஆதலின், மேலோர் குரலடங்க, செல்லாத நாணயத்தைச் செல்விப்பதற்கு ஏனையோர் செய்யும் ஆரவாரங்களையே எங்கும் கேட்பவர்களாகின்றோம். இவ்வெள்ளைக்காகிதம், எந்த வெள்ளைக் காகிதமும், செல்லாத நோட்டுக்களே; அதை விலைப்படுத்த முயல்கின்றவர்தம் பேரொலிக்கிடையே பெரியோர் மொழிகள் மூழ்கிவிடுகின்றன. ஆதலாற்றான் மனிதர் தம்மையே விற்றுண்பவர்களாகி, "நாங்களெல்லோரும் ஒரே நிறை, ஒரே விலை" எனப் பகர்தற்கு இடமுண்டாகின்றது. விளம்புவது விலையாயின், எல்லாரும் தம் நாட்டு மன்னர்களாய் விற்றுக்கொண்டாலென், அடிமைகளாய் விற்றுக்கொண்டாலென். மன்னருக்கு விலைகூறுவதே ஏழைமை பெரிதுடைத்து.



# வில்லி பாரத விளக்கம்

## சபா பருவம்—சூதுபோர்ச் சருக்கம்

[232-வது பக்கத் தொடர்ச்சி]

குறிஞ்சிநிலம் புக்க குந்தியின் மைந்தர்தம் சேனையிலுள்ள யானைகளின் செய்தி இதுவாக, அவ்வனத்திலுறைந்த சிங்கங்கள், அம்புபோல் விசைகொடு செல்லும் குதிரைகளின் அழகிய குளப்படிகளிலிருந்து குன்றுபோல் எழுந்த தூளிகளை, மலையும் சிகரமுமெனவெண்ணிப் பாய்ந்து, அம் மட்பொடிகளால் மறைக்கப்பட்டிருந்த வீரரது கூரிய வேல்களின்மேல் வீழ்ந்து மடிந்தன. நெருங்கிய நிலமன்னர் செலுத்திய தேர்களின் ஒலியினால் அரமடந்தையர் செவிகளும் செவிடுபட்டன. இவ்வாறு, புகழின் எல்லையைக் கடந்திருந்த தருமனும் குறிஞ்சியைக் கடந்துநெய்தல் நிலத்தை யெய்தினான். நெய்தலென்பது கடலும் கடல் சார்ந்த இடமும். நிலவடிவின் நூல்களையும் நன்காய்ந்த சரித்திரகாரர்கள் அத்தினபுர மென்றது தற்காலத்தில் அவுட் (Oudh) என்று வழங்கப்படும் நகரமென்பர். அங்ஙனமாயின், அதை நெருங்கிச் சேருங்காலத்தில் கடற்கரை எதிர்ப்படாது. நிற்க அக்கடற்கரையில் தருமன் கண்ட காட்சி யாது?

ஒளிநலந் திகழ்வளை யுறங்கு நன்னிழற்
களிநறுஞ் சுரும்பிமிர் கண்டல் வேலிசூழ்
புளினமுங் கானலும் பொற்ப நோக்கினானளினமும் புறந்தரு நயன வேந்தனே.

[சுடர்விட்டொளிரும் சங்குகள் தங்கிய நிழலையுடையனவும், களித்தோடும் வண்டுகள் மொய்த்த மணமுள்ள தாழைமரங்களாலான (நறுங்கண்டல்) வேலிகளாற்சூழப் பெற்றனவுமான மணற்குன்றுகளையும், கடற்கரைச் சோலைகளையும் அழகுடன் நோக்கினான். செந்தாமரையும் தோற்கும்படியான கண்களையுடைய அரசன்]

நெய்தல்நிலத்திற்கு உரியனவாக இலக்கணத்திற் கூறப்பட்ட பொருள்களனைத்தையும் தருமன் ஒருங்கே கண்டான். கானல் என்பது உப்பளமுமாம்.

பெருங்கட மலைக்குலம் பெயர்த்தும் வந்தன
மருங்கடர் பேரணை வகுக்க வேயெனா
விருங்கட களிறுதே ரெண்ணில் சேனைகண்
டருங்கடல் வாய்திறந் தலறி யார்த்தவே.

[பெருங்காடுகளடர்ந்த மலையின் கூட்டம், தன்னிடத்தில் நெருங்கிய பெரியதொரு அணையைக் கட்ட மீண்டும் வந்ததென்று, பெரிய மதங்கொண்ட யானைகளையும், தேர்களையுமுடைய சேனையைக்கண்டு கடலானது வாய்விட்டு அலறி ஓசையிட்டது.]

முன்னமோர் முறை, எண்பதாம் பாடலில் "வெம்படைக் கடற்செய்ததோர் சேதுபந்தனம் போலும்" என்று வெளியிட்ட எண்ணத்தையே இங்குக் கவி இப்பாடலில் மீண்டுங் கூறுகிறார். யானைகளையும் தேர்களையும் கண்ட கடல், முன்னம் சேதுவினெய்தி வரிசிலை யிராமன் செய்த அணையொன்று இன்னொருகால் செய்யப்படப் போகிறதென அஞ்சி அலறிற்று. அதனை யாப்புறப் பிணித்தல் அதற்கு நாணத்தையும் இன்னலையும் தந்தது; அதனால் ஓலமிட்டது. மனிதரும் மற்றவைகளும் மலையினூடே காணப்படும் காடுகளாயினர். யானையையும் தேரையும் மலைகளெனமயங்கியது. மயக்கவணி. கடல் கண்டு ஓலமிட்டதென்னும் தற்குறிப்பேற்றத்தைக் கண்டவர்க்கு, இராமன் கடலைக் கண்டது ஞாபகத்திற்கு வரும். அச்சமயம், கம்பர் தனது இராமாயணத்தில் கடல்காண் படலத்திற் கூறியுள்ள செய்யுட்களனைத்தும்பொன்னெனப் போற்றத்தக்கவை. அப்புலவரது தற்குறிப்பேற்றங்கள் வியக்கத்தக்கவிதம் அமைந்துள்ளன. அவைகளை இதுவரை யோதாதாரெவரேனு மிருப்பின், அவர் அவைகளை யுடனே வாசித்துக் கண்களினூற்றிக் களிப்புறுவாராக.

வீரர், இளநீர்க் காய்களையும், பனம்பழங்களையும் எடுத்தருந்தி, வெய்யிலிற் கால்கள்சுட்டபோது தாழைமரத்தின் நிழலில் ஒதுங்கி, மெல்லநடந்து நெய்தலைக் கடந்து அத்தினபுரியை யணுகினார்கள்.

அத்தின புரிதனக் கருகு வால்வளை
முத்தின நிலவெழ முகைக்குந் தாமரைத்
தொத்தின பொய்கையுஞ் சுரும்ப ருமலர்க்
கொத்தின சோலையுங் குறுகி வைகினார்.

[அத்தினபுரிக்கு அருகாமையில், வெண்ணிறமுள்ள சங்கானது ஈன்ற முத்துக்கூட்டத்தின் ஒளியாகிய நிலாத் தெறித்தலால், குவிகின்ற தாமரைப்பூவின் கூட்டத்தினையுடைய குளங்களையும், வண்டுகள் நீங்காத மலர்க்கொத்தினையுடைய சோலைகளையும் குறுகித் தங்கினார்கள்.]

ஊரிற்குள் நுழைவதற்கு முன் அதன் வெளிப்புறத்தில் பாண்டவர் தம்பரிவாரங்களுடன் தங்கியவிடம் பொய்கை பொதிந்த சோலை. அப்பொய்கையில் ஓர் புதுமையுண்டு. பகலில் மலர்ந்து இரவில் நிலவொளிபட முகையும் தாமரை; இப் பொய்கையிலோ அவ்வாறன்றிப் பகற்காலத்தேயேகுவிந்திருந்தன தாமரைகள். அஃதேன் என ஆராயப்புகுந்த கவிக்குக் காரணமொன்று இப்பொழுது காணப்பட்டது. சங்குகள் ஈன்ற முத்துக்கள் மிகுந்து நிலவென ஒளி வீசுதலால், அருகே இருந்து நிலவொளியே இதுவெனக் கண்ட தாமரைமலர்கட்குக் குவியுந்தன்மை இயற்கையிலேற்பட்டது. பூங்கொத்து எனப் பொருள்படும் தொத்து என்பது அடிமை யென்னும் பொருளும் கொண்டது. நிலவின் ஒளியைக் கண்டதும் தாமரைகள் அடிமைபோற் செயலற்றுக் குவிந்தனபோலும். இரவியின் ஒளிநிற்க, நிலாவொளியையே பெரிதும் கருதியது என்னையோவெனில், நிலாக்கற்றைகள் அருகிலிருந்தமையாலும், அவைகளைத் தாமரைகள் தண்ணீரிற் கண்டமையாலும் என்க.

தேரிற்கட்டிய குதிரைகளும், தனித்து வந்த பரிமாவும் பிரயாணத்தால் விளைந்த இளைப்புத்தீர்ந்தன; யானைகள் அங்குக் காணப்பட்ட பரிமள மரங்களிற் கட்டப்பட்டன. வீரர்களும் இளைப்பாறினார்; சுமைதாங்கிய வண்டிகளும் சரித்துக் கீழேவிடப்பட்டன. எங்கும் படங்கு வீடுகள் (கூடாரங்கள்) அமைக்கப்பட்டு வீரரும் அவைகளிற் றங்கினார்கள்.

மறத்திருந் தானையான் வஞ்ச மெண்ணினானறத்திருந் திலனெனா வஞ்சி யந்தலூர்
புறத்திருந் ததுவெனப் புனிதன் பாசறை

[வன்மைகொண்ட பெரிய படையை யுடைய துரியோதனன் சூதை யெண்ணினன்; தருமத்தின் வழியில் நிற்கவில்லை யென்று அஞ்சி அந்த இந்திரப்பிரத்த நகரம் வெளிப்புறத்தே இருந்தது என வெண்ணும்படி பரிசுத்தனை தருமனது பாடிவீடு நல்ல தன்மையோடு கூடியிருந்தது. இதைத்தவிர வேறு வகையில் அதற்கு உவமை சொல்வதற்கில்லை.]

இந்திரப்பிரத்த நகரிலிருந்து பெயர்ந்து வந்த வீரரும் சேனைகளுமே இந்திரப்பிரத்த நகர். அது அத்தினபுரியை யணுகி அதனுள் நுழையாமல் வெளிப்புறத்திருந்ததன் காரணம், அறவழி நில்லாத் துரியோதனனுடைய தன்மையை அறிந்திருந்ததுதான். அன்றியும், தருமன் வருகையைக் கேட்ட நகரமாந்தர், அவனுடன் பழகி அவனது தன்மையை யறிந்த அத்தினபுரப் பழங்குடிகள், அவனைக் காணு மவாவினால் தங்களூரை விட்டு வெளியே வந்தவர், தருமனையும் அவன் தம்பியரையும் கண்டபின் அவர்களைவிட்டுப் பிரிய மனமில்லாதவராய் அங்கேயே தங்கிவிட்டது, (அந்தவூர்) அத்தினபுரமே புறத்திருந்ததை யொக்கும். பழங்குடிகளின் வருகையாலும், பாசறை நிறைந்து கண்களுக்கு நல்ல தன்மையதாய்க் காணப்பட்டது. இவர்களது வரவுகேட்ட துரியோதனன் முதலோர் களித்து மெய்ப் புளகமெய்தினர்கள். உண்டிகொண்டவர் உறங்கும் வண்ணம் இரவும்வந்துற்றது. இவர்களது படைவீடுகளைக் காணவந்தது நிலாவும்.

மருண்மிகு சுரும்பின மணந்த சோலையி
னிருள்களி னிடையிடை யெறித்த வெண்ணிலா
வருளுடை மைந்தர்தோ ளணைந்த மங்கையர்
புரிகுழ னெகிழ்ந்தவெண் போது போலுமே.

[மயக்கம் மிகுந்த வண்டுகளின் கூட்டம் நெருங்கிய அச்சோலையில், இருட்கற்றைகளி னிடையிடையே பிரகாசித்த வெண்ணிலா, அன்புகொண்ட ஆடவர் தோள்களைச் சேர்ந்த பெண்களது சுருண்ட கூந்தலிலிருந்து நெகிழ்ந்து வெளியிற்றோன்றிய வெண்மையான மலர்களை ஒத்தது.]

சோலையிலுள்ள மரச்செறிவினால் நிலவொளி முழுதும் நிலத்திற் படவில்லை. அம்மரங்கள் காற்றிலசைந்து விலகிய சமயத்தும், கிளைகள் ஒன்றோடொன்று உறாமல் சற்றே தனித்திருந்த இடங்களிலும், நிலாக்கதிர், இலைகளினிடையே ஊடுருவிப் பாய்ந்து சிறு சிறு துண்டுகளாகச் சிதறுண்டு காணப்பட்டது. இது இருள்செறிந்த கூந்தலில் செருகப்பட்ட சிறு மலர்கள், அம்மங்கையர் தம் கணவருடன் விளையாட்டயர்கையில் புறத்தே தோன்றியதை ஒத்தது. மேலும், இருளில் கிளைகளின்வழியாய்க் கீழ்விழுந்த நிலாக்கதிர், மங்கையர்தம் கருநிறமுள்ள கூந்தலிலிருந்து அவர்தம் கணவர் தோள்சேர்ந்த பூசலில் அவிழ்ந்து விழுந்த பூக்களை போலும். சுரும்பினங்கள் மருள்மிகுந்தது என்றுங் கேளாத அரவத்தைக் கேட்டலாலுமன்றி அளவு கடந்து மதுவை யுண்ணலாலுமாம்.

---

# தேவகி

[246-வது பக்கத் தொடர்ச்சி]

## அத்தியாயம் 7

மறுநாட் காலையில் நான் குடந்தைமாநகர் போய்ச் சேர்ந்தேன். மாமனது மனையை நான் எய்தியதும் வண்டியின் அரவங்கேட்டு வெளிவந்த தையம்மாள் என்னை ஆர்வமொடு வரவேற்றாள். அவளொடு உட்சென்றேன். கூடத்தின்கண் நின்றுகொண்டிருந்த கோமளம் ஒப்புக்கு வாவென்று கூறித் தன்கருமத்தில் கருத்தூன்றியவளா யிருந்தாள். விஜயனோ என்னைத் திரும்பியும் பார்க்கவில்லை. இன்னும் அவர்களுக்கு ஏனோ என்மேல் இவ்வன்மம், அறியேன். தையம்மாள் எனக்கென்று ஒழித்துவைத்திருந்த அறையில்சாமான்களைவைத்துவிட்டுக் காலைக்கடன்கழித்து ஆகாரம் கொண்டேன். நான்சென்றிருந்த ஜமீன்தார் மனையினைப் பற்றியும் அங்கு நான் பெற்றிருந்த கருமத்தைப் பற்றியும் தையம்மாள் விடாது கேட்டாள். அன்னையார் காட்டும் அருமையும், என் மாணவி இராணியின் பெருமையும் பற்றி விரித்துரைத்தேன். நான் அங்குச் சுகமே இருப்பது அறிந்த தையம்மாள் பெருமகிழ்வு எய்தினள். இன்னபடி நாங்கள் வார்த்தையாடினோம். பிறகு வார்த்தை மாமியைப் பற்றிப் படர்ந்தது. என் மாமன்குடும்பம் உற்றுள்ள பரிதாப நிலையையும், பெண்ணலச் சேவையினால் ஏற்பட்ட பெரும்பொருள் நஷ்டத்தைப்பற்றியும், மாமியின் தேகநிலை கவலைக்கிடமான தாகவேயிருப்பது பற்றியும் தையம்மாள் கூறினள். சேகரன் புரிந்த ஜனநலத்தொண்டு என் மாமன் தேடிய சொத்திற்கு எமனாகவா அமையவேண்டும் என்று வருந்தினேன். விஜயன் கட்டுக்கடங்காமலும் பள்ளிக்குச் செல்லாமலும் அலைகின்ற செய்தி எனக்கு வருத்தத்தைத்தர, பெருந்தகை என்மாமனுக்கு இவனொரு பிள்ளையாய் வந்தமைய வேண்டுமென்று மனமாழ்கினேன். பின் மாமியைப் பார்ப்பதற்கு மேன்மாடத்தில் அவள் படுத்திருக்கும் அறைக்குச் சென்றேன். நோயினால் அவளது வாடியுலர்ந்த மேனியைக் காணத் திடுக்குற்றுப்போனேன். அவளருகில் சென்று 'மாமி' என்று அழைத்தேன். அவள் அயர்ந்து தூங்குவதுகண்டு அவளை எழுப்ப மனமில்லாமல் திரும்பினேன்.

பகல்போஜனம் முடிந்தது. கோமளம் இருக்குமிடம் சென்று 'மாமிக்கு உடம்பு எப்படி யிருக்கின்றது; ஆகாரம் செல்கின்றதா' என்று கேட்டேன். எனக்கு அவள் சிறிதும் முகம் கொடாது ஏதேதோ முணுமுணுக்கவே, ஏன் அவளைக் கேட்டேன் என்று வருந்தினளாய் என் அறைக்குத் திரும்பினேன். நான் கொண்டுவந்திருந்த இராமாயணத்தை எடுத்துப் படித்தவளாய் வருந்தும் என் மனத்திற்கு அமைதியைத் தேடிக்கொண்டேன். இன்னபடி இராமகதையில் கருத்தூன்றி யிருக்கும் என்னை, மாமி பார்க்க விரும்புவதாகத் தையம்மாள் அழைத்தாள். மாமி வைத்திருக்கும் செய்தியை அறியும் ஆவல் என்னைத் தூண்ட உடனே எழுந்து மேன்மாடம் சென்றேன். மாமியின் அறை எய்தி அவளருகில் அமர்ந்துகொண்டேன். அவள் என்னை நோக்கவுமில்லை, வாய் திறக்கவுமில்லை. அவள் மோனத்தைக் கலைக்கவெண்ணி, மெல்ல, 'மாமி' என்று அழைத்தேன்.



உடனே அவள் என்னை உற்று நோக்கினாள். அவள் கண்களில் தெளிவில்லை, மருள விழித்தாள். 'நீ யார்' என்று மெலிந்த அவள் குரலில் கேட்டாள். "நான் தான் தேவகி. என்னைத் தெரியவில்லையா? இன்று காலையே வந்துவிட்டேன். காலையில் நீ அயர்ந்து இருந்ததால் உன்னை எழுப்பவில்லை." என்று கூறினேன். எனினும் 'நீதானு தேவகி' என்று மறுபடியும் கேட்டாள். 'ஆம், மாமி, நான்தான்' என்றேன். அவள் அயிர்ப்பது கண்டு அருகிருந்த தையம்மாள், "தேவகி தான், இன்று காலையில்தான் வந்தாள்" என்றாள்.

"இன்று வந்தாய். என் கடிதம் கண்டவுடன் வர முடியவில்லையோ. நானென்ன உனக்கு ஒரு பொருளா......வருகின்ற வழியில் அவனைக் கண்டனையோ. பாவி, இப்படிச் செய்வான் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை" என்று அவள் பெருமூச்செறியவும், "மாமி, நான் உடனே வரமுடியாமற்போனதற்கு மன்னிக்கவேண்டும். காரணம் மனமிலாமையா லன்று. நீ யாரைக் குறித்துக்கேட்கின்றாய் என்று தெரியவில்லை" என்று சொன்னேன்.

"அவனைத்தான். பொல்லாத சேகரனை. அவன் மனைவியின் வஞ்சனையை நான் அன்று அறியவில்லை. புருஷனும் மனைவியும் என்னை இப்படியா வஞ்சிக்க வேண்டும். பத்தாயிரத்தைப் பறித்துக்கொண்டு சென்றனரே பாவிகள். அவனைக் கண்டனையோ?"

"மாமி நான் யாரையும் வழியில் காணவில்லை" என்றேன். 'ஐயோ, இதோ செல்கின்றான். அதோ ஓடுகின்றான். அவன் மனைவி என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டு அவனைத் தொடர்கின்றாள். இருவரும் மோட்டாரில் ஏறிவிட்டனர். அவர்களைத் தொடருங்கள். போலீஸ்நிலயம் சென்று அந்தக் கள்வரைப் பிடிக்கச்சொல்லுங்கள். வண்டி புறப்பட்டுவிட்டது; என் கண்மறைந்தனர். ஓடுங்கள்" என்று மீண்டும் மாமி அரற்றினாள்.

"மாமி, இங்குயாரும் வரவில்லை. நினைவினால் ஏற்படும் தோற்றம். கொள்ளையடித்துச் சென்ற அக்கீழ்மையோர் இங்கு வருவரா? பிழைப்பற்றசோம்பேறிகளும் வஞ்சகர்களுந்தான் பொதுஜனநல முயற்சிகளில் ஈடுபடுவர்என்று மாமன் அடிக்கடி சொல்வதில்லையா" என்று நான் சொல்லி முடிக்குமுன், "துஷ்டப் பெண்ணே, உன் நாவை நெடிது நீட்டாதே. எனக்கா ஓதுகின்றாய் உபதேசம். அகன்றுபோ! என்னருகில் இராதே. மாதர் முன்னேற்றத்திற்கு நான் உழைத்ததும் வஞ்சிக்கவேதானோ. உன்மாமனிடம் கற்றதை நீ என்னிடம் காட்டவேண்டா? உன்னோடு நான் பட்டதெல்லாம் போதாவோ. உன்னை யார் அழைத்தது. இங்கு ஏன் வந்தாய்" என்று கடுகடுத்தாள்.

இக் கொடுமையை என்னால் தாங்க இயலவில்லை. என்கண்கள் நீர்சொரிய, "இன்னும் ஏன் என்னைக் காக்கின்றாய். நீ அழைத்துத்தான் வந்தேன். வந்ததற்குப் போதியபடி பெற்றும் விட்டேன். இன்றேபோய்விடுகின்றேன். நீ வருந்தவேண்டா" என்று எதிர் உரைத்தேன்.

"ஆம், போவாய். போகத்தான் கற்றுவிட்டாயே. இருக்கட்டும், உன்னோடு ஒன்று பேசவேண்டும். இப்பொழுது எனக்குப் பேசச் சக்தியில்லை; அதைக் கேட்டுவிட்டுப் பிறகு, உனக்கு இஷ்டமானவனைத் தேடிக்கொண்டு செல்லலாம்...."

"இரண்டு வயதிலிருந்து நேற்றுவரை உனக்காக வேண்டியபடி பட்டேன். எல்லாம் விழலுக்கு இறைத்தநீர் ஆயிற்று. நல்ல பெண்ணடி நீ. யாரைக் கேட்டுக்கொண்டு வெளியேறினாய். எந்த மகனைத் துணை கொண்டாய். ஊர் சிறிக்கின்றது. தலையை வெளியிலே காட்ட முடியவில்லை. என் குலத்தைக் கெடுக்கவந்து முளைத்தாய்........"

"தாயின் குணம் போகுமா? மகராஜி கால் வைத்தாள், உடனே குடும்பமும் கலைந்தது. புருஷனோடு உடன்பிறந்தவனைப் பிரித்தகற்றினாள். அவள் வயிற்றில் பிறந்தது வேறு எப்படியிருக்கும்?......"

"விஜயன் உருப்படாமற் போகின்றான். கோமளத்திற்கோ வரன் அகப்படவில்லை. எப்படி யகப்படும். என் மானம் போகின்றது. நீ செத்து மடிந்தால்தான் என் குடும்பத்திற்கு நற்காலம் வரும்" என்று விம்மி விம்மி மூர்ச்சையுற்றாள்.

"உனக்கும், உன் குடும்பத்திற்கும் நான் எத்தீங்கு இழைத்தேன். செத்து மடிந்த என் அன்னையை ஏன் உன்வாய்க்கு இரையாக்குகின்றாய்" என்று நான் மனந்தாளாமற் கூறிவிட்டுக்கீழிறங்கினேன். அன்றுமுதல் ஒருவாரம் வரை என் மாமி இருக்கும் இடத்தையும் நான் நோக்கவில்லை. அவளும் என்னைத் தன்னிடம் அழைக்கவில்லை. படிப்பதும், தையம்மாளுக்குச்சமையல் வேலையில் உதவுவதும், ஒழிந்த நேரங்களில் தோழியர் வீடு செல்வதுமாய் என்காலத்தைக் கழித்துவந்தேன். ஒருநாள் பிற்பகல் தையம்மாள் ஏதோவொரு வேலையாய் வெளியே போகலானாள். நீண்டநேரம் வரையில் அவள் திரும்பவில்லை. வானமும் மழைபெய்யக் குமுறிக்கொண்டிருந்தமையால் என் தோழியர் வீட்டிற்குப் போவதென்பதையும் நிறுத்தினேன். பொழுதோ போகவில்லை. என்செய்வது எனச்சிந்தித்தேன். அப்பொழுது என் மனக்கண்ணின்முன் ஜயரங்க பூபதியார் தோன்றினர். உடனே என் அறை சென்று அச்செம்மலின் உருவத்தைப் போன்றவோர் சித்திரம் தீட்டத் தலைப்பட்டேன். என்முன் தோன்றியஉருவத்தையும் தீட்டிவிட்டேன். தீட்டிய அவ்வுருவத்தை என் கண்களால் நான் பருகிக்கொண்டிருந்தேன். அவ்வேளை மாமிமகள் கோமளம் என் பின்புறம் நின்று அவ்வுருவத்தைப் பார்த்திருப்பதை நான் அறியேன். சிறிதுநேரம் சென்றதும் கோமளம் என்முன் வந்து, "இது யாருடைய படம். நீ அறிந்த ஒருவரது உருவமோ" என்றாள்.

நாணத்தால் தலைகுனிந்த நான், குனிந்த தலை நிமிராமல், "இல்லை, என்மனத்தில் பிறந்து நடமாடும் ஓர் உருவம்." என்று பதில்மொழிந்து படத்தைக் கீழே வைத்தேன். வைத்த அப்படத்தைக் கோமளம் எடுத்துச் சிறிதுநேரம் கூர்ந்து பார்த்தாள். பின், 'நன்றாகத் தான் நீ வரைந்துள்ளாய். மூக்கும் விழியும் நன்றாகத்தான் இருக்கின்றன. எனினும் முகம் நிறைந்த அம்மை வடுவும், கவலைபதிந்த நெற்றிச் சுருக்கமும் இவ்வுருவத்தின் பொதுத்தோற்றத்தில் அழகின்மையையே காட்டுகின்றன. நீ என்ன நினைக்கின்றாய்.' என்று கேட்டாள்.

இந்தச்சொல் என் மருமத்தில் கூரிய அம்பெனப் பாய்ந்தது. என் மாமியின் சுடுசொல்லும் இவ்வளவு கூர்மை பெற்றிருக்கவில்லை. என் கொற்றவன்தன் திருவுருவை இழித்தொருவர் சொல்வதை என்செவி

ஏற்குமோ. "காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சன்றோ. ஊமையென்றும், குருடென்றும், முடமென்றும் பெற்றவர் தம் மக்களைத் தள்ளுவதில்லை. இது என் கைப்பிறந்த குழவி, எனவே எனக்கு இது அழகுடையதாகத்தா னிருக்கும். இந்த வுருவத்தின் நலந்தெரிய நீ வேறொருவரைக் கேட்டிருக்கவேண்டும்.' என்று விடையுரைத்துப் பின், படத்தை என் பெட்டியினுள் வைத்துவிட்டு, இனியும் இவ்வார்த்தை வளராவண்ணம் காக்கவேண்டி எழுந்து தோட்டத்தை நோக்கி நடந்தேன். கதிரவனும் மேற்றிசைக் கடலில்மூழ்கினன். இன்னபடிஅற்றைப்பொழுதைக் கழித்தகற்றினேன். தையம்மாளும் வந்துசேர்ந்தாள்.

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

4-ம் பத்து 9-ம் தசகம்

[250-வது பக்கத் தொடர்ச்சி]

1-ம் பாசுரம்.

நண்ணாதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்தேங்க
வெண்ணாத் துயர்விளைக்கு மிவையென்ன யுலகி
[யற்கை
கண்ணாளா கடல்கடைந்தா யுன்கழற்கே வரும்பரிசு
தண்ணாவா தடியேனைப் பணிகண்டாய் சாமாறே.

பதக்குறிப்புக்கள் :—கண்ணாளா - கண் + ஆளன் கண்களையுடையவன் - காருணியம், தயை, பரிபூர்ண அநுக்கிரஹம் இவைகளைச் சித்தமாய்க் கொடுக்கும்படியான நோக்கை யுடையவன்.

உரை:—நண்ணாதார் முறுவலிப்ப - வேண்டாத விரோதிகள் சிரிக்க, நல் உற்றார் கரைந்தேங்க-நல்ல சிநேகிதர்கள் பரிதபித்து இன்னாதாராகவும் (இவ்விடத்தில், லௌகீகர்களது உலகஇயற்கையை நினைத்து ஆழ்வார் அருளிச்செய்கிறார்.உலகத்தார் பிறர் கிரஹமென்ன நிலங்களென்ன தனங்களென்ன இவைகளைக் கவர்ந்துகொள்ளும்பொருட்டு, விபரீதங்களாலும் நியாயமில்லாத மார்க்கங்களாலும் அவர்களை ஹிம்ஸித்துப் பொருளீட்டும் விஷயத்தில் செய்யும் முயற்சிகள் யோக்கியமான நேசர்களுக்கு மனவருத்தத்தையும், விரோதிகளுக்கு ஹாஸ்யத்தையும் உண்டாக்கும். பெரும்பாலும் உலகத்தார் பொருளீட்டும் விஷயத்தில் நியாயமென்றும் அநியாயமென்றும் பார்ப்பதில்லை என்பது தொனி) எண்ணாத் துயர்விளைக்கும் - பிறர்க்கு மிகவும் துக்கமான மனக்கிலேசத்தை உண்டாக்கி அவர்கள் பொருள் இழக்கும்படி செய்கின்ற, இவை - இந்த உலகியற்கை - இந்த லோக வியாபாரம், என்ன - என்னவாயிருக்கிறது; நான் இது காண ஸஹிக்கமாட்டேன். கண்ணாளா-கிருபையுள்ளவனே, கடல் கடைந்தாய்-தேவர்களுக்கு அமிர்தத்தை அளிக்கும் நிமித்தம் அவர்களுடன் கூடியிருந்து முன் சமுத்திரத்தைக் கடைந்தவனே, உன் கழற்கே வரும் பரிசு-உன் திருவடிகளை யான் அடையும் பிரகாரத்தை, தண்ணாவாது - காலதாமதமில்லாமல், பணி கண்டாய் - உத்திரவு கொடுக்க நீ உடனே திருவருள் புரியவேணும். சாமாறே - அல்லது-யான் இறந்துபட்டுத் தேஹத்தையாவதுவிட்டுவிடும்படி சம்மதிக்கவேணும்-பகவான் தன் திருவடிகளில் ஏற்றுக்கொண்டான் ஆகில் அதுவே "சாமாறு" ஆகுமாகையால், "சாமாறு" என்ற தனிப் பிரயோகம் வந்தது இரண்டுபக்ஷமாய் விவஹரிக்கும்பொருட்டாம். அதாவது திருவடிகளில் ஏற்றுக்கொள்ள உனக்குத் திருவுள்ளமில்லையாகில் தேஹவியோகத்துக்காவது சம்மதிக்க உத்திரவு வேண்டுமென்பது தாத்பரியம்.

விசேஷக் குறிப்பு:—சென்ற தசகத்தில், பரம புருஷனை விட்டுப் பிரிந்த வியஸநத்துக்கு ஆளான இவ்வாழ்வார் இத்தசகத்தில் உலகவியற்கைபற்றி இன்னாதாராகின்றது எப்படி ஒவ்வுமெனில்?-ஆழ்வார் உலகிலுள்ளவர்களையாகிலும் துணையாகக் கொண்டு பகவானது குணங்களில் தோய்ந்து தம் காலத்தைக் கழிக்கலாமென்று பார்த்ததில், உலகத்தார் அவன் திறத்தில் கொஞ்சமேனும் ஈடுபடாதவராய் இருக்கக் கண்டது மாத்திரமன்றி, தம் சுயகாரியங்களான பொருளீட்டலில் அயோக்கிய நடவடிக்கைகளில் பிரவேசித்துப்பிறருக்குத் துயர்விளைகின்ற தன்மையைநோக்கி முன்னிலும் இன்னாதாராகி "அடியேன் இவ்வுலகியற்கை கண்டு ஆற்றவல்லேன் அல்லேன். என்னை உன் திருவடிகளில் கொள்ளவோ அதற்கு இஷ்டமில்லையாகில் அடியேனுக்குத் தேஹ வியோகத்தையாவது ஸங்கல்பிக்கவோ வேணும்" என்று பிரார்த்திக்கின்றாரென்பதை அறிந்துகொள்ளவேண்டும்.

---

2-ம் பாசுரம்.

சாமாறுங் கெடுமாறுந் தமருற்றார் தலைதலைப்பெய்
தேமாறிக் கிடந்தலற்று மிவையென்ன வுலகியற்கை
யாமாறொன் றறியேனு னரவணையா யம்மானே
கூமாறே விரைகண்டா யடியேனைக் குறிகொண்டே.

பதக்குறிப்புக்களும் உரையும்:-ஆமாறு ஒன்று அறியேன் நான் என்று அந்வயிக்க—உலகியற்கை எங்ஙனம் இருப்பதென்றால்-உன்னை விட்டுப் பிரிந்திருக்கின்றோமே யென்று அலற்றாமல் தங்கள் புத்திரகளத்திரங்களை விட்டுப் பிரிகின்றோமே என்று அவர் மரண தெசையிலும் அவர்களுக்குக்கேடுவரும்சமயத்திலும் அவரவர்களுக்குத் துக்கம் வரும்போதும் மனவியாகுலப்பட்டு மற்றவர்களோடு கூடிக்கூடி அலற்றுகின்றார்கள். நானும் இவ்வுலகத்தார் போலல்லாமல் உன் திறத்தேபடுவேனோ அல்லது இவர்கள் போல்யானும் உன்னைமறந்து உலக நடவடிக்கையையே யனுசரித்து நடந்து நல்லொழுக்கத்திலிருந்தும் விலகிவிடுவேனோ எனக்குத் தெரியவில்லை. ஆனபடியால் என்னை ஞாபகத்தில்வைத்து உன் திருவடிகளுக்கு வந்துவிடும்படி கொள்ளவேணும், பிரானே" என்று அபேக்ஷிக்கிறார்.

---

3-ம் பாசுரம்.

கொண்டாட்டுங் குலம்புனைவுந்
தமருற்றார் விழுநிதியும்
வண்டார்பூங் குழலாளும்
மனையொழிய வுயிர்மாய்தல்
கண்டாற்றே னுலகியற்கை
கடல்வண்ணா வடியேனைப்



பண்டேபோற் கருதாதுன்
னடிக்கேகூய்ப் பணிகொள்ளே

உரை :—கொண்டாட்டும் - எல்லாராலும் கொண்டாடப்படும்படியான தன்னுடைய கீர்த்தியும், குலம் தமர் உற்றார் புனைவும் - ஜாதிகளென்ன பந்துக்களென்ன இவர்களுடைய குலசம்பந்தமாய்த் தொடரும் மரியாதையும், விழுநிதியும் - தங்களாலே விரும்பி அநுபவிக்கப்படுகின்ற தனங்களும், வண்டு ஆர் பூங் குழலாளும் - வண்டுகள் மொய்க்கின்ற அழகிய கூந்தலையுடைய மனைவியும், மனை - தன் அருமையான வீடும், ஒழிய - ஒழிந்துவிட, உயிர்மாய்தல் - மரண தெசையிலுங் கூட உன் திறத்தில் படாதோ, ஐயோ, இவைகள் எல்லாவற்றையும் துறந்துபோகின்றோமே என்று துக்கப்படுகிற, உலகியற்கை - உலக வழக்கத்தை, கண்டு ஆற்றேன் - உன்னைப் பிரிந்து படுகின்ற வியசநத்தைக் காட்டிலும் அதிக துக்கமாயிருக்கிறது. பண்டேபோல் - முன் நான் பட்ட துயரங்கள் போலவே இதனையும், கருதாது - சில்லரை வியஸநமாக நினைக்காமல், உன் அடிக்கே-உன்னுடைய திருவடிகளுக்கே, கூவி - அழைத்து, பணிகொள்ளே - என்னிடத்தில் கைங்கரியம் பெற்றருளவேணும்.

குறிப்பு:—வைணவ மதத்தில், மோக்ஷத்திலும் பகவானுக்குப் பணிவிடைகள் செய்வதே பக்தர்களுக்கு உரித்தான சுவரூபம் ஆனதுபற்றி அக் கைங்கரியத்தையே இங்குக் கோருகிறார்.

---

4-ம் பாசுரம்

கொள்ளென்று கிளர்ந்தெழுந்த
பெருஞ்செல்வம் நெருப்பாகக்
கொள்ளென்று தமம்மூடு
மிவையென்ன வுலகியற்கை
வள்ளலே மணிவண்ணா
வுன்கழற்கே வரும்பரிசு
வள்ளல்செய் தடியேனை
யுனதருளால் வாங்காயே.

பொழிப்புரை:-பகவானே! உன்னை யாசைப்படாமே அதிக துக்க ஹேதுவும், விரோதிகளின் பீடைக்கு இடமாயு முள்ள அநர்த்தமான பெருஞ் செல்வத்தைப்பின்னையும் ஸ்வீகரியென்று,(தமம்மூடும்) அந்தகாரமானதுதூண்டுகின்ற இவ்வுலகியற்கையை என்னவாகச் சொல்வேன். ஔதாரிய முள்ள பரனே, ரத்நம்போல் சிற்றுருவாய் என் மனதால் அடக்கிவைத்துக்கொள்ளத் தகுந்தவனே, கிருபை செய்து, ஆச்ரய சுலபனை உன் மகிமையாலும், பரம காருணியத்தாலும் அடியேனை உன் திருவடிகளை யடையும்பரிசு வாங்கியருளவேணு மென்கிறார்.

---

5-ம் பாசுரம்.

வாங்குநீர் மலருலகில்
நிற்பனவுந் திரிவனவும்
ஈங்குயிர்கள் பிறப்பிறப்புப்
பிணிமூப்பால் தகர்ப்புண்ணு
மீங்கிதின்மேல் வெந்நரக
மிவையென்ன வுலகியற்கை
வாங்கெனைநீ மணிவண்ணா
வடியேனை மறுக்கேலே.

பதக்குறிப்புக்கள் :—வாங்கும் நீர் - மலைகளையும் மண்ணையும் தன்னுடன் கலந்துகொள்ளும் சுவபாவமுள்ள ஜலம், மலர் - இந்நீராலே உலகம் உண்டாகி மலர்ந்தது உபநிஷத்தில் சொல்லியபடி "அத்ப்ய பிருதிவி, பிருதிவியா ஒஷதயா ஒஷீதிப்பியோ அன்னம், அன்னாத் புருஷ" என்றபடி எல்லா உலகமும் தண்ணீராலே உண்டானதாகத் திருவுள்ளம் பற்றிக் கூறியபடி. ஈங்கு - இவ்வுலகத்தில், பிறப்பு இறப்பு பிணிமூப்பால் - பிறப்பு இறப்பு நோய் மூப்பு இவைகளால், தகர்ப்பு-பீடையை,உண்ணும்-அநுபவித்தலல்லால், ஈங்கிதன் மேல் - இவ்வுலகவாழ்க்கைக்குப் பின்னர்,வெம்நகரம் - கொடூரமான நரகமும் மனிதர்கள் அநுபவிப்பது இவ்வுலகியற்கை. அடியேனை மறுக்கேலே - என்னை மோஹிப்பியாதே. வாங்குக - உன் திருவடிக்கே வாங்கியருளாய்.

குறிப்பு:—உலகத்திலுள்ள மற்ற ஆத்மாக்களைப் போல் இந்த உலகத்தில் என்னையும் இட்டு ஹிம்சை செய்யாதே, ஈண்டென்னை வாங்கியருளாயென்று பிரார்த்திக்கின்றார். இவ்வுலகத்தில் பிறப்பு இறப்பு மூப்பு பீடைகளும் பின்னர் உன்திறத்தில் படாதோர்க்குக் கொடிய நகரம் இவைகளல்லவோ பிராப்தமாயுள்ளன.

# திருக்குறள் நீதி

## பொருட்பால்— 3. ஒழிபியல்

[256-வது பக்கத் தொடர்ச்சி]

### 7. நாணுடைமை

1. நாண மொன்றே பேணுதல் பெருமை.
2. நாணுடைச் சிறப்பு ஊணுடைக் கில்லை.
3. ஊனுயிர்க் கெல்லாம் நாணென்ப மேன்மை.
4. அணிநா ணின்றேற் பிணியாம் பிறர்க்கு.
5. பிறன்பழி தன்பழியாய்ப் பேணுவோன் பெரியோன்.
6. ஞால மிழப்பினு நாணங் கைவிடேல்.
7. நாணங் கெடவரின் பேணு யுயிரை.
8. நாணத்தை நாணைப் பேணு தறமே.
9. நாணின்மை யெவர்க்கும் நன்மை தொலைக்கும்
10. நாணகத் தில்லார் நடைபிண மாவார்.

### 8. குடிசெயல் வகை

1. குடியோங்கச் செய்தலே முடியணி கீர்த்தியாம்
2. அறிவோ டாள்வினை குடிசெய லாகும்.
3. குடிசெய விரும்பின் மிடியகற்றுந் தெய்வம்.
4. குடியுயர்த்து வானைத் தடைசெய்யா தெய்வம்
5. குற்றமிலாது குடிசெய்யின் சுற்றமதாகு முலகு.
6. நல்லாண்மைதான்பிறந்தஇல்லாண்மைசெய்யின்
7. அடிப்பாரந் தாங்குவோன் குடிக்கொன்று வேண்டும்
8. மிடிகருதாத் தொண்டன் குடியுயரச் செய்வான்.
9. உடல்வருத்தம் பாரான் குடியுயர்த்தும் மேலோன்.
10. நல்லா னில்குடி நில்லா தழியம்.

9. உழவு

1. செய்தொழிற் கெல்லா முய்தொழி லுழவு.
2. பிறதொழிற் காணி யுழவன்றி யில்லை.
3. தொழுதூண் வாழ்வி னுழுதூ ணுறுதி.
4. பலகுடை தங்கு மலகுடை நீழலில்.
5. இரவா திரப்போர்க் கீய்பவ ருழவரே.
6. காராளர் கைகட்டின் சீராமோ தறவறம்.
7. உழுபுழுதி யறக்காயின் உரமின்றி விளையும்
8. ஏரினு மெருநன்று நீரினுங் காப்பு.
9. அணையா நிலமும் மணையாளின் ஊடும்.
10. இலமென் றிருப்பாரை நிலமகள் நகுமே.

10. நல்குரவு

1. இன்னா வறுமையி னின்னா தில்லை.
2. இல்லாமை யொன்றே இருமைக்குந் துன்பம்.
3. குலங்குடி தேய்க்குங் கலங்குநல் குரவே.
4. இற்பிறந் தோர்மிடி இழிவையுண் டாக்கும்.
5. நல்குர வொன்றே பல்துயர்க் குறைவிடம்.
6. இல்லாதான் நூற்பொருள்செல்லா தவைக்கண்.
7. அன்னையும் வேண்டாள் பொன்னையில் லானை.
8. இசையுமோ பொறுத்தற் கில்லாக் கொடுமை.
9. தீரா வறுமையே தீயினுங் கொடியது.
10. துவ்வாத நல்குரவிற் றுறப்பதே நன்று.

11. இரவு

1. கரப்பிலார் மறுப்பின் இரப்பார்க்குப் பழியில்லை
2. ஈவார் துன்புறு திரத்தலு மினிதே.
3. கரப்பிலா நெஞ்சர்பா லிரப்பது மினிது.
4. கரத்தலில் லார்மாட் டிரத்தலு மீதலே.
5. ஈவா ருளராற் சாவா திரப்பர்.
6. கரப்பறியார் காட்சியே இரப்போர் துயர்நீக்கும்.
7. இகழ்ந்தெள்ளா தீவாரை மகிழ்ந்துள் ளுவப்பர்.
8. இரப்பா ரில்புவி மரப்பாவைத் தோற்றம்.
9. இரப்பா ரில்லெனில் ஈவோர் புகழில்லை.
10. லோபியை இரப்பான் கோபியா தொழிக.

12. இரவச்சம்

1. கரவாதார் மாட்டு மிரவாமை நன்று.
2. இரக்கப் படைத்தாற் பிரமனே கெடுக.
3. இன்மைகெட இரப்பான் வன்மை அறியாமை.
4. சாந்துய ரெய்தினுஞ் சான்றோ ரிரவார்.
5. இரவா அன்னம் எள்ளத் தனைபோதும்.
6. ஆவிற் கிரப்பினும் நாவிற் கிழிவே.
7. இல்லையென் பாரிடம் இரவா தொழிக.
8. ஈவார் மறுக்கிற் சாவான் யாசகன்.
9. இரவுள்ளங் கருகின் கரவுள்ளார் கெடுவர்.
10. உண்டெனு முண்மை யுயிர்காப் பாகும்.

13. கயமை

1. கயவரும் மக்களே செயல்குண மொப்பின்.
2. நல்லார் பழியச்ச மில்லை கயவர்க்கு.
3. பயமிலா தொழுகலிற் கயவருந் தேவரே.
4. பட்டிமக்கள் முன்னே தட்டிநிற்பன் கயவன்
5. தண்டம் பொருளவாக் கண்டஞ்சுங் கயவன்.
6. மறைபிறர்க் குரைத்தலால் அறைபறை கயவரே.
7. இடிப்பவர்க் கன்றிக்கயவ ரிரப்பவர்க் கீயார்.
8. சொல்லவிடுவர் சான்றோர் கொல்லவிடுங் கயவர்.
9. உடுப்பூண் காணக் கடுப்பவர் கயவர்.
10. எற்றுக்குரியர் உற்றக்கால் விற்றற்குரியர் கயவர்.

ஒழிபியல் முற்றும்

# நான் கண்ட உலகம்

கோபாலன் எனது ஆருயிர் நண்பன். அவனோடு பேசுவதென்றால் எனக்கு அளவிறந்த விருப்பம்; பொழுது போவதே தெரியாது. அவனுக்குத் தமிழ் மொழியில் நல்ல பயிற்சியுண்டு. கவிகளும், "கட்டுவான்." "காளமேகப்புலவர் யானைக்கும் பானைக்கும் சிலேடையாகப் பாடிய பாட்டு ஒன்று சொல்லியிருக்கின்றேனே அது நினைவிருக்கிறதா? இதோபார், மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் சிலேடையாக ஒருபுலவர் பாடியிருக்கிறார்" என்று ஒரு பாட்டைக் கூறி அதன் சொல்நயம் பொருள்நயங்களை விவரித்து "எப்படி இருக்கிறது" என்பான். நான் மிகவும் வியப்புற்று, "யார் பாடியது?" என்றுகேட்பேன். "பின்பு சொல்கின்றேன். பாட்டு எப்படி இருக்கின்றது"? என்று மீண்டும் கேட்பான். "மிகவும் நன்றாயிருக்கிறது" என்பேன். "நான் தான் பாடினது" என்று இயம்பி நிமிர்ந்து உட்கார்ந்து புன்சிரிப்போடு என்னைப் பார்ப்பான். பின்னர் "தித்த தித்த" என்ற ஒரு சொல்லே பலமுறை வரும் ஓர் செய்யுளைச் சொல்லி, "இதில் ஏதாவது விளங்குகிறதா?" என்று என்னைப்பார்த்துச் சிறுநகைசெய்து கேட்பான். யான் ஒன்றும் கூறாது வாயொடுங்கி இருப்பேன். உடனே அவன் உயிரையும் மெய்யையும் வேறு வேறாகப் பிரித்து அலைத்து மிக விரிவாகப் பொருள் கூறுவான். "த்" என்னும் ஓர் எழுத்திற்கு மட்டும் சுமார் 15 நிமிடங்கள்வரை பொருள் கூறிப் "புலவர் திறம் எப்படி" என்பான். எனக்குச்சிறிது வெறுப்பாகத்தான் இருக்கும். எனினும் அதை வெளியே காட்டாமல், "மிக அருமை, மிக அருமை" என்பேன். எனது இந்த நண்பனோடு நீங்கள் சிலநாள் பழகுவீராயின் "பொறுமை கடலினும். பெரிது" என்று அனைவராலும் போற்றப்படும் அவ்வரியகுணம் உங்களுக்குத் தானுகப் படிந்துவிடும். அவன் ஒரு கவியைப்பற்றிக் கூறிக்கொண்டிருக்கும் பொழுது நீங்கள் இடையே எழுந்துசெல்ல முயன்றால் "நல்லசமயத்திற் செல்ல முயல்கிறீர்களே; இதுவரை கூறியதெல்லாம் முன்னுரை; இனிமேல்தான் கவிநலம்; இதனைக்கேட்காமல் சென்றால் பிறகுஎன்ன பயன்? என்று விளம்பி உங்களை அமர்த்திவிடுவான். இதெல்லாம் பொறுமைப் பயிற்சியின் பாலபாடம். இத்தகைய என் நண்பன் ஒருநாள் என்னை யணுகிக் "கேட்டாயா செய்தியை? என்றான். எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. நெஞ்சு மிகத் திடுக்கிட்டு, "என்ன? என்ன?" என்றேன். "கோயில்களில் புலையரும் தீயரும் நுழைய முயல்கின்றனராமே! என்றான். என் மனம் அமைதி பெற்றது. நெடுநாட்களாக முயன்று வரும் செய்தி அப்பொழுதுதான் எனது நண்பன் செவிக்கு எட்டியுளது. "நண்பா, இதில் என்ன வியப்பு! அவர்கள்தான் ஏற்கனவே நுழைந்திருக்கின்றனரே" என்றேன்.



"வீணிற்குப் பொய்சொல்லாதே; எங்கே? எந்தக் கோவிலில்?" என்று வினவினான்.

"உண்மையாகவே. எல்லாக் கோவில்களிலும்"

"எல்லாக் கோவில்களிலுமா? நமதூர்ப் பெருமாள் கோவிலிலுமா?"

"ஆம்." என்றேன்.

எனக்கு இதுகாறும் பொறுமைப்பயிற்சி யளித்துவந்தநண்பன்தான் இப்பொழுதுபொறுமையிழக்கத் தலைப்பட்டான். எனதிரு கைகளையும் பிடித்து உலுக்கி, "இதனை மெய்ப்பிக்காவிடின் உன்னை எளிதில் விடேன்" என்று கூவினான். அமைதியாக, "நல்லது" என்றேன் நான். இச்சமயத்தில் தற்சயலாக அவ்வூர்ப் பெருமாள் கோவில் "அர்ச்சகர்" அங்கு வந்துசேர்ந்தார். எனது நண்பன் அவரிடம் நிகழ்ந்ததைக் கூறினான். அவரோ "பொய் கூறினாலும் பொருந்தக் கூற வேண்டும், "அம்மி பறந்ததைக் கண்டேன்" என்பது போலும் புலையரும் தீயரும் கோவிலில் நுழைந்திருக்கின்றனர் என்று சொல்வது" என்றார். அவர் கூறிய உவமைப்பொருத்தம் எனக்கு விளங்கவில்லை. "மலைகளே முன்பு இடம்விட்டு இடம்பெயர்ந்ததாகக் கேள்வியுற்ற நமக்கு ஓர் சிறு அம்மி பறப்பதா வியப்பு"? என்றேன்.

"ஆனால் நமது ஊர்ப் பெருமாள்கோவிலில் அவர்கள் எப்பொழுது நுழைந்தார்கள்?"

"இப்பொழுதும் நுழைகின்றனர்"

இதற்குள் வேறு சிலரும் கூடிவிட்டனர். என்னைப் பொய்யன் என்று இகழ்ந்தனர். எனது நண்பன் மட்டும் என்னை உற்றுப்பார்த்துக்கொண்டே நின்றான். நான் தகுந்த ஆதரவு இல்லாமல் பேசமாட்டேன் என்பது அவன் எண்ணம். "உண்மையைச் சொல்" எப்பொழுது நுழைந்தனர்? என்று மீண்டுங் கேட்டான். "நண்பா" இப்பொழுதும் (தர்ப்பைப்) புல்.ஐயரும் (வேள்வித்) தீயிற்கு உரியாரும் நுழையவில்லையா" என்று அவனிடம் பயின்ற சிலேடையை என் முயற்சியால் கூறினேன். நண்பன் அமைதி பெற்றான். என் புலமையை மெச்சி மகிழ்ந்தான். ஆனால் நீங்கள் புல்-ஐயர் புலையர் என்று எப்படி யாகும் என வினவலாம். எனது நண்பன் எனக்குச் சிலேடைப்பொருள் கூறக் கற்பித்தானன்றி இலக்கணம் கற்பிக்கவில்லை. "தீண்டாமை வேண்டுமா, வேண்டாமா? ஆலயத்துள் அனைவரும் செல்வது நன்மையா தீமையா?" என்று என்னைப்பார்த்துக் கேட்டான் கோபாலன். யான் கூறும் மறுமொழி அவன் கருத்திற்குப் பொருந்தும்படியா யிருக்கவேண்டுமென ஆணையிடுவது போலிருந்தது, அவன் வினவியமுறை. "தீண்டாமை இருந்தால் என்? தொலைந்தால் என்; கோவிலுக்குள் ஒரு சிலர் செல்லாவிடின் அதனால் அவர்க்குத் தெய்வம் அருளாமற் போகாது.; சென்றாலும் அதனால் கோவிலிலுள்ள தெய்வத்தன்மை மறைந்து விடாது; எல்லாம் நாளை பேசிக்கொள்வோம்" என்று கூறி அவன் பேச வாய்திறப்பதற்குள் யான் பொய்யாம் இவ்வுலகில் அழிதற்குரிய எனதுஉடலைப் பேணுந்தொழிலில் ஈடுபடச் சென்றேன்.

இரவு, உணவு கொண்டதும் படுக்கையிற் படுத்தபடியே அன்று வந்த நம் "கலாநிலயக்" கிழமை இதழைப் பார்த்துக்கொண்டே யிருந்தேன். அதற்கு முன்பு வந்த மூன்று வார இதழ்களிலும் வெளிவந்துள்ள "சொன்னால் விரோதம்" என்ற தலையங்கத்தின் தொடர்ச்சியே இவ்வாரத்திலும் வந்திருந்தது. முதன்முதல் அத்தலைப்பைக் கண்ணுற்றதும் "என்ன சொன்னால் விரோதம்" என்று யானே என்னை வினவிக்கொண்டேன். உடனே என் அறிவு, "பொறுமையாக அக்கட்டுரை முழுவதும் வாசி; பின்னர் இன்னதென்று அறிவாய்" என்றது. தக்க சமயத்து உற்றதுகூறித் தெரிவித்த என் அறிவுக்கு ஓர் வணக்கமளித்துத் தொடர்ந்துபடிக்கலானேன். கலாநிலயத் தலையங்கங்களைப் பல முறை ஆழ்ந்து படிப்பினன்றி அவற்றின் பொருளை என் சிறுமதியால் உணர்வது அரிது. யான் ஒருமுறை படித்ததும் பின்னர்ச் சிந்திப்போம் என மற்றவற்றைப் படிக்கத் தொடங்கினேன். கம்பராமாயணக் கட்டுரையில் பின்வரும் பாக்கள் என் மனதில் நன்கு பதிந்தன.

"உலக மெல்லாம் பிணிமுதற் பாசம் வீசித், துன்னருந் தவத்தி னெய்துந் துறக்கம்போற் றோன்றிற் றன்றே."

குழுமி மேகங்கள் குமுறின குளிர்துளி கொணர்ந்த
முழுவில் வேடரும் முனிவரின் முனிகிலர் உயிரைத்
தழுவி நின்றன பசிபில பகையில தணிந்த
உழுவை யின்முலை மானிளங் கன்றுகள் உண்ட

"கால மின்றியுங் கனிந்தன கனிநெடுங் கந்த
மூல மின்றியு முளைத்தன நிலனுற முழுதுங்
கோல மங்கைய ரொத்தன கொம்பர்க ளிம்பர்ச்
சீல மன்றியுஞ் செய்தவம் வேறுமொன் றுளதோ."

பின்பு அத்தலையங்கத்தைச் சிந்தித்தேன். "மனிதர் மனிதராகத்தான் இருப்பார்கள். ஆதலால் இந்தச் சட்டம் இந்தச் சீர்திருத்தம் வேண்டும் என்னாமல் "கயவர் குணம் இவ்வாறு இருக்கின்றது. ஆதலின் இந்தச் சட்டமும் சீர்திருத்தமும் வேண்டும்" என்று சிலர் துவக்குவாராயின் இவைகளின் நோக்கும் போக்கும் வேறோர் வழியதாகும். ஏனெனில் கயவர், கயவராகவே இருந்துதீரவேண்டும் என்னும் நியதி எங்கும் இல்லையே. நோய் நிலையை நோய்நிலை யென்றுணராமல், அதுவேதான் இயற்கையாகிய நேர்நிலை என நினைத்து அதற்குத் தக்கபடி மற்றவைகளை யமைப்பதற்கும், இதற்கெதிர் நோயை நோயே என்று தெரிந்து அந்நோய் நீங்கிச் சுகநிலை யடைவதற்குரியவைகளை முயல்வதற்கும் இடையே கிடக்கின்ற வேற்றுமை சிறியதன்று." [தொகுதி 6. பக்கம் 42] "கோயிற் கதவை வேறோர் இனத்தவர்க்கு அடைத்துவைத்தால் என்—இது மானிட இயற்கை யென்னும் அமைதியில் ஒருவருக்கும் பரிபவமின்றி அடங்கிவிடாதோ......உணவுகேட்டு வருபவரை மறுத்தனுப்புவதே இயற்கையென்றும், வேண்டியபடி அளிக்க இசைவது பரிகசமென்றும் அமைந்திருக்கும் இவ் வாழ்க்கையை உயர்த்தத் தகுவன தீண்டாமை யனைய சீர்திருத்த முயற்சிகள் அல்லவென்பதைச் சொன்னால் விரோதமாயினும் சொல்லாமற் றீரலாமோ"? [தொகுதி 6. பக்கம் 62]—இவை போன்ற சில பகுதிகள் என் அறிவைக் குழப்பமுறச் செய்தன. "மனிதர் மனிதராகவே இருத்தல், கயவர் குணம், கயவர் கயவராகவே இருத்தல், நோய்நிலை, சுகநிலை, இச் சொற்றொடர்கள் எவற்றோடு இயைபுடையன? தன் இனத்தவர்க்குத் தன் வீட்டுக் கதவை யடைத்துக் கோயிற்கதவை வேறு ஓர் இனத்

தவர்க்குத் திறக்கச்சொல்பவரினும், தன் வீட்டுக் கதவை தனக்கே உரிமையாக வைத்துக்கொண்டு கோயிற் கதவையும், வேறோர் இனத்தவர்க்குத் திறக்க மறுப்பவர் எத்திறத்தார்? நீண்டாமை நோய் நிலையா சுகநிலையா? என்பன போன்ற பல எண்ணங்கள் என் மனதில் நிகழ்ந்தன. எனது அறிவு கலக்க முற்றது. கலக்கத்தால் அயர்ச்சி மிக்கது. அயர்ச்சி தூக்கமாக முடிந்தது. (தொடரும்)

---

# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[249-வது பக்கத் தொடர்ச்சி]

### (VII) அப்பரும் முற்றிய லுகரமும்

### (I) முற்றியலுகர ஓசைச் சிறப்பு

திருநாவுக்கரசு நாயனர் பாடிய தேவாரம் முற்றும் இசைத்தமிழ் விரவிய செய்யுட்களாகையால், உலகியல் வழக்கில், அதாவது வசனத்தில், வரும்சொற்களின் ஓசையை விளக்கும் உதாரணங்கள் சிலவற்றையே காணலாம். கு, சு, டு, து, பு, று என்னும் ஈறுனது தனிக்குறிலொழிந்த ஏனைய உயிரெழுத்துக்களுக்குப் பின்னும், மெய்யெழுத்துக்களுக்குப் பின்னும் வருமாயின், அவ்வுகரம் குற்றியலுகரமே யெனச் சிற்றிலக்கணங்கள் செய்யும் போதனை, பேரிலக்கணத்தில் அத்துணைப் பயன்படாதென்பதை முன்னரே கண்டோம். 'நுந்தை' என்னும் முறைப்பெயரின் 'நு' கரத்தின்மேல் நின்ற உகரம், குற்றியலுகரமென்றும் கண்டோம். இவ்வாறு மெல்லெழுத்தை, குற்றியலுகரம் ஊர்ந்துவரக்கூடுமாயின், இடையெழுத்தையும் ஊர்ந்துவருதல், இசைக்கு ஒவ்வாதது அன்றும். மாத்திரையியலில் சமயத்திற்குத் தக்கவாறு மாறுபடும் தன்மையுள்ள இசைக்கு ஒத்த விளியின் இயற்கையிலும், இப்பரிசு ஒருவாறு விளங்கலாகும்.

தொல்காப்பியனர் விளிமரபில் பின்வரும் விதிகளைக் கூறுகின்றார்:—

"விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்று மியற்கைய வென்ப"
(தொல் - சொல் - 118)

"அவ்வே
இவ்வென வறிதற்கு மெய்பெறக் கிளப்ப"
(ஷை 119)

அவைதாம்

"இ, உ, ஐ, ஓ வென்னு மிறுதி
யப்பா ளுன்கே யுயர்திணை மருங்கின்
மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே"
(ஷை 120)

என்று கூறிய பின்னர், அவற்றுள்

"உகரந் தானே குற்றிய லுகரம்"
(ஷை 123)

என்று வரையறுக்கின்றார். இதற்குச் சேனவரையர் பின்வருமாறு பொருள் கூறுகின்றார். "மேற் கூறப்பட்ட உகரமாவது குற்றியலுகரம் என்றவாறு. திரு, திருவே எனச் சிறுபான்மை முற்றுகரவீறு முளவேனும், ஓதிய முறையானே விளியேற்பன குற்றுகரவீறே யாகலின் 'குற்றியலுகர மென்றார்." திருவே யென்னும் விளி தேவாரத்திலுளது:—

"திருவே! யென் செல்வமே தேனே! வானோர் செழுஞ்சுடரே" என்னும் திருவாவடுதுறைத் திருத்தாண்டகச் செய்யுளில் "திருவே" என்னும் சொல்லில் ரகரத்தின் மேல் நின்ற உகரம் அஃகி ஒலிப்பது இப்பாசுரத்தைப் பாடும்போது நன்கு விளங்கும்.

இதன்றியும் "வேந்து" என்பது ஏகாரம் பெற்று விளியேற்பது போல் 'கதவு' என்பதன் ஈற்று உகரமும் ஏயொடு சிவணுதலால் "கதவே!" என்பதில் அவ்வுகரமும் குற்றியலுகரம் ஆகும். விளி ஏற்காத சொல்லாகிய நிலையில் கதவு என்பதின் உகரம் முற்றியலுகரமாகும். இவ்வாறு குற்றியலுகரம், முற்றியலுகரமாவதும், முற்றியலுகரம் குற்றியலுகரமாவதுமான தொடர்நிலைச் சந்தர்ப்பங்கள் பல உள. இவற்றுள் குற்றியலுகரமாய்க் கொள்வதா, முற்றியலுகரமாய்க் கொள்வதா, என மயங்காதவண்ணம் மாணவர்களுக்குத் தொல்காப்பியனர் சில இடங்களைச் சிறப்புவகையாற் காட்டினர். அவை வருமாறு:—

(i) "ஒன்றறி கிளவி தறட வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்"
(தொல் - கிளவியாக்கம். 8)

(உ - ம்) 'மிளிர்வது' என்னுமிடத்து வினையானது ஒன்றன்பாலைத் தெரிவிக்கின்றது. பால்பகா அஃறிணைப் பெயர்களைப் பகுத்தறிய வினையே பயன்படுவதால் 'ஒன்றறி கிளவி' என்றது முக்கியமாய் வினைச் சொல்லை யெண்ணியே மொழியப்பட்டதென நாம் கொள்ளலாம்.

"பொன்போல மிளிர்வதோர் மேனியினீர்
புரிபுன்சடையீர் மெலியும் பிறையீர்!" என்றவிடத்து "மேனி" என்பது ஒன்றன்பால் என்பதைப் பகுத்தறிய மிளிர்வது என்னும்வினையேபயன்படுவதால், அத்தகைய ஒன்றறி கிளவி, து, று, டு என்னும் ஈற்றினைப் பெற்று வருங்காலை, அவை எத்துணை யெழுத்துக்கள் தொடர்ந்து வரினும், குற்றியலுகரமென்றே கொள்க. "ஒன்றறி கிளவி குற்றியலுகரத் திறுதியாகும்" என்றதால்வினைமுற்றே அத்தகைய கிளவியென்பதையும் நாம் அநுமானிக்கலாம். தகர வுகரம் மூன்று காலங்களும், வினைக்குறிப்பும் பற்றி வருதலும், றகர வுகரம் இறந்த காலமும் வினைக்குறிப்பும் பற்றி வருதலும், டகரவுகரம் வினைக்குறிப்பே பற்றி வருதலுமாகிய வேறுபாடுடைமையால், த, ட, ற வூர்ந்த குற்றியலுகரமென வெடுத்துக் காட்டினர். ஒன்றன்பாலைக் காட்டும் பெயர்ச்சொல்லாயினும் து, டு, று என்னும் ஈற்றின் பயனல் பாலை விளக்குமாயின், அத் து டு றுக்கள் குற்றிய லுகரமாகும். (உ - ம்) கடு என்னும் சொல்லில், 'டு' என்பது ஒன்றன்பாலைக் குறிக்க அங்கு நிற்கவில்லையாதலால், இவ்வுகரம் முற்றியலுகரமேயாம்.

"கடுப்பொடி யட்டி மெய்யிற்
கருதியோர் தவமென் றெண்ணி
வடுக்களோ டிசைந்த நெஞ்சே
மதியிலி பட்ட தென்ன!
மடுக்களில் வாளை பாயுந்
திருவையா றமர்ந்த தேனை
அடுத்துநின் றுன்னு நெஞ்சே!
யருந்தவஞ் செய்த வாறே!"
திருவையாறு - திருநேரிசை 5.

என்னும் திருப்பாசுரத்தில் கடு 'வடு!, மடு', என்பன முற்றுகரமாம்.

இத்தகைய முற்றுகரச் சொற்கள், வேறு சொற்களுடன் சந்தியிற்கலந்து தொடர்மொழியாய் நிற்குங்காலை, இவ்வுகரத்தின் சுபாவம் மாறுவதில்லை. (உ-ம்)

தட்டிடுஞ் சமண ரோடே
தருக்கிநா னவமென் றெண்ணி
ஒட்டிடு மனத்தி னீரே
யும்மையான் செய்வ தென்னே
மொட்டிடு கமலப் பொய்கைத்
திருவையா றமர்ந்த தேனே
டொட்டிடு முள்ளத் தீரே
யும்மைநா னகந்திட் டேனே.
திருவையாறு - திருநேரிசை 3.

என்னும் அந்தப் பாசுரத்தில் ஒட்டிடு, மொட்டிடு என்னும் மொழிகளில் உள்ள ஈற்று உகரம் முற்றியலுகரமென்பது வெளிப்படை. இசையில் இவ்வுகரம் ஒரு மாத்திரைக்குச் சற்று அதிகமாய் ஒலிப்பதும் கவனிக்கலாம்.

ஆகையால் பலவெழுத்துக்களாலாகப்பட்ட மொழியின் ஈற்று து, டு, றுக்கள் ஒன்றன்பாலை விளக்கப் பயன்படுமாயின் அச்சமயங்களில், அவைஇசையில் அஃகியொலிப்பதால், குற்றியலுகரமென் றுணர்ந்து ஏனைய சமயங்களில், சந்தி பிரித்துக் காணுமிடத்து ஈற்று மொழியைக் கவனித்துப் பின்னரே, குற்றியலுகரமோ, அல்லது முற்றியலுகரமோ வென்று நிச்சயிக்கவேண்டும். அதற்கே மேற்கண்ட கிளவியாக்கச் சூத்திரத்துடன் இவ் வினையியற் சூத்திரத்தையும் ஒருங்கு நோக்குக:—

"ஒன்றன் படர்க்கை தறட வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்"
தொல்-வினையியல் 217

இவ்வாறு படர்க்கை மாத்திரத்தில் குற்றியலுகரம் பயன்படுவதோடு நிற்காமல், தன்மைச்சொல்லினும்

"கடதற வென்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோ
டென்னே னல்லென வரூஉ மேழுந்
தன்வினை யுரைக்குந் தன்மைச் சொல்லே"
தொல் - வினையியல் 203.

என்றதனல் இந்நான்கு குற்றியலுகரங்களும் தன்மை வினைக்குப் பயன்படும் என்றார். இக் குற்றுகர நான்கும் அல்லும் எதிர்காலம் பற்றிவரும். இதைச் சேனவரையர் "எதிர்காலம் பற்றி * வழக்குப் பயிற்சியுமில்லாக் குற்றுகரத்தை அங்ஙனம் வரும் அல்லொடு பின்வையாது, மூன்று காலமும் பற்றிப் பயின்று வரும் என், ஏன் என்பனவற்றின் முன் உம்மீற்றொடியைய வைத்தது, செய்கென்பதுபோல செய்துமென்பதூஉம் காண்கும் வந்தேம், என வினைகொண்டு முடியுமென்ப தறிவித்தற்கெனக் கொள்க" என்பார்.

---

* கண்டந் தான்கறுத் தான்கால னாருயிர்
பண்டு கால்கொடு பாய்ந்த பரமனார்
அண்டத் தோங்குமண் ணாமலை கைதொழ
விண்டு போகுநம் மேலை வினைகளே.
திருவண்ணாமலை - திருக்குறுந்தொகை 8.

---

# தமிழ்ப் பாடம் 64.

## நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[254-வது பக்கத் தொடர்ச்சி]

இருதுபன்னன் குண்டினபுரம் போய்ச் சேர, வீமராசன் "நிபம் ஒன்றுமின்றி இப்பொழுதிவன் எதற்காக வந்தான்" என்று வியந்து வினவியதும், அதற்கு அவ் வயோத்திமன்னன் "உன்னைப்பார்க்க வேண்டுமென்ற ஆசையினல் வந்தேனே யல்லாமல் காரணம் வேறொன்று மில்லை" என்று மெல்லப் பதிலுரைத்ததும், இனிவரும் நான்கு செய்யுள்களில் அடங்கியிருக்கின்றன.

---

ஆமை முதுகி லலவன் றுயில்கொள்ளும்
காமர் நெடுநாடு கைவிட்டு—வீமன்றன் [ங்கூற்ற
பொன்னகரி சென்றடைந்தான் போர்வேட் டெழு
மன்னகரி யொன் றுடையா னங்கு. 50.

பதப்பிரிவு:—ஆமை முதுகில் அலவன் துயில் கொள்ளும் காமர் நெடு நாடு கைவிட்டு வீமன்தன் பொன் நகரி சென்று அடைந்தான் போர் வேட்டு எழும் கூற்றம் அன்ன கரி ஒன்று உடையான் ஆங்கு.

அன்வயம்:—போர்வேட்டு எழும் கூற்றம் அன்ன கரி ஒன்று உடையான், ஆமை முதுகில் அலவன் துயில்கொள்ளும் காமர் நெடுநாடு கைவிட்டு வீமன் தன் பொன்னகரி சென்று அடைந்தான். (ஆங்கு என்பது அசை.)

பதவுரை

போர் - சண்டையை
வேட்டு - விரும்பி
எழும் - எழுகின்ற
கூற்றம் - யமனை
அன்ன - போன்ற
கரி - (பட்டத்து) யானை
ஒன்று - ஒன்று
உடையான் - உடையவனாகிய இருதுபன்னன்,
ஆமை - அமையினுடைய
முதுகில் - முதுகின்மேல்
அலவன் - நண்டுகள்
துயில்கொள்ளும்-(அமர்ந்து)நித்திரை செய்யும்
காமர் - அழகிய
நெடு - பெரிய
காடு - (கோசல) நாட்டை

கைவிட்டு - விட்டு நீங்கி
வீமன்தன் - வீமராஜனது
பொன் - அழகிய
நகரி - குண்டினபுரத்தை
சென்று - போய்
அடைந்தான் - சேர்ந்தான்.

விரிவுரை:—பரபரப்பும் சுறுசுறுப்பும் இல்லாமல் எல்லாம் எங்கும் அமைதியோடு சாந்தமாய் அமர்ந்திருக்கின்ற நாடு கோசலநாடு என்பதைக் காட்டுவதற்கு, 'ஆமை முதுகில் அலவன் துயில்கொள்ளும் காமர் நெடுநாடு' என்று அது வருணிக்கப்பட்டிருக்கிறது. கம்பரும் நாட்டுப் படலத்தில்,

நீரிடை உறங்கும் சங்கம் நிழலிடை உறங்கும் மேதி
தாரிடை உறங்கும் வண்டு தாமரை உறங்கும் செய்யாள்
தூரிடை உறங்கும் ஆமை துறையிடை உறங்கும் இப்பி
போரிடை உறங்கும் அன்னம் பொழிலிடை உறங்கும் தோகை

என்று அந்நாட்டின் அமைதியை அழகாக வருணித்திருக்கின்றார். அத்தகைய அமைதி நிறைந்தவொரு தேயத்திற்கு அரசனாயிருக்கின்ற இந்த இருதுபன்னன்மாத்திரம் அந்நாட்டினுடைய தன்மையைச் சிறிதேனும் பெற்றவனாகாமல், தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் என்ற வார்த்தையைக் கேட்டவுடன் விரைவிரைந்து தன் அமைதியிழந்து, "மற்றிதற்கு என்செய்கோ!" எனப் புறப்படல் ஆயினனே என்பதை எண்ணிப் புகழேந்திப்புலவர் புன்னகை புரிபவர்போல், காமர்நெடுநாட்டைக்கைவிட்டான்என்று குறிக்கின்றார். நாடு என்பது இங்கு அந்நாட்டின் தன்மைக்குப் பதிலாகநிற்கின்றது. நாட்டைக்கைவிட்டான், என்றதால் அந்நாட்டிற்கு இயற்கையாய் உள்ள அமைதிக் குணத்தைக் கைவிட்டு இருதுபன்னன் புறப்பட்டான் என்பதை உணரலாம். அப்படிக் கைவிட்டு அவசரத்தால் ஒரு கருமத்தை எண்ணாது துணிபவர்களுக்குக் கிடைக்கும்கதி நம் இருதுபன்ன மகாராஜனுக்கும் கிடைக்கின்றது. "என்மேல் எறிகின்ற மாலை எழில் நளன்தன் முன்னே விழுந்தது காண் முன்நாளில், அன்னதற்குக் காரணந்தான் ஏது" என்று ஏமாப்புடன் முன்னே நளனுக்குச்சொன்ன சொற்களில் இப்பொழுது கட்டுண்டு தவிக்கவேண்டிய பேதையாய் முடிந்திருக்கின்றான்.

---

வெற்றித் தனித்தேரை வீமன் பெருங்கோயில்
முற்றத் திருத்தி முறைசெய்யும்—கொற்றவற்குத்
தன்வரவு கூறப் பணித்துத் தனிப்புக்கான்
மன்விரவு தாரான் மகிழ்ந்து 51.

கருத்து:—வீமனது அரண்மனை வாயிலில் தேரை நிறுத்தி அவனுக்குத் தன்வரவைக் கூறச்செய்து இருதுபன்னன உள்ளே சென்றான்.

---

கன்னி நறுந்தேறல் மாந்திக் கமலத்தில்
மன்னித் துயின்ற வரிவண்டு—பின்னையும்போய்
நெய்தற் கவாவு நெடுநாட நீயென்பால்
எய்தற் கவாவியவா றென். 52.

பதப்பிரிவு:— கன்னி நறும் தேறல் மாந்தி கமலத்தில் மன்னி துயின்ற வரி வண்டு பின்னையும் போய் நெய்தற்கு அவாவும் நெடு நாட நீ என்பால் எய்தற்கு அவாவிய ஆறு என்.

பதவுரை.

கன்னி - புதிய
நறும் - வாசனையுடைய
தேறல் - தேனை
மாந்தி - குடித்து
கமலத்தில் - தாமரையில்
மன்னி - பொருந்தி
துயின்ற - உறங்கிய
வரி - கோடுகளை உடைய
வண்டு - வண்டானது
பின்னையும் - மறுபடியும்
போய் - போய்
நெய்தற்கு - நெய்தல் மலரிற்கு
அவாவும் - ஆசைப்படும்
நெடு - பெரிய
நாட - கோசலநாட்டு அரசனே,
நீ - நீ
என்பால் - என்னிடம்
எய்தற்கு - வருவதற்கு
அவாவிய - விரும்பிய
ஆறு - விதம்
என் - என்ன? என்று வீமன் இருதுபன்னனைக் கேட்டான்.

விரிவுரை:—தமயந்தி தனக்கு இரண்டாம் சுயம்'வரம்என்று இருதுபன்னனை வரச்செய்தசூழ்ச்சியும் நோக்கமும் அவள் தந்தை முற்றும் அறியானாயினும் ஒருசிறிதேனும் உணர்ந்திருப்பானோ யாதோவென்று நினைக்கும்படி இச்செய்யுளில் அவன் இருதுபன்னனை அழைக்கின்ற சொற்கள் அமைந்திருக்கின்றன. 'தாமரையின் தேனைக் குடித்து மிக்க அமைதியுடன் நித்திரை செய்துகொண்டிருந்த வண்டு, அதனின்று எழுந்து நெய்தல்மலரில் உள்ள தேனிற்கு ஆசைப்பட்டுப் போகின்ற தன்மைவாய்ந்த நாட்டையுடையவனே" என்று இருதுபன்னனை வீமன் அழைக்கின்ற இவ்வாசகத்தில் உள்ளுறை உவமம் ஒன்று அடங்கியிருக்கலாம். ஆனால் ஒரு வித்தியாசம். கோசலநாடோ அமைதியுடைய நாடென்பதும் அதன்கண் வசிக்கின்ற ஜீவன்கள் தாம் இருக்கும் இடத்திலேயே இருக்கின்ற இன்பங்களை அனுபவித்துச் சுகமாக இருக்கும் குணத்தையுடையனவென்பதும் யாருவம் அறிந்திருப்பார். வீமனுக்கும் அது தெரிந்திருக்கும். ஆயினும் அந்த இயற்கைக்குமாறாக வரிவண்டு இங்கு நெய்தலுக்கு அவாவுவதாகக்கூறப்பட்டுள்ளது. இதுதான், இக்காலம்எல்லாம் அவலமாய்ப் போவதற்குக் காரணமாய் அமைந்ததென்று தாயுமானவர் கூறியிருக்கும் "ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றுகின்ற" குணம். இந்தக் குணம் கோசலதேசத்திற்கு இல்லையென்பது தெரிந்திருக்கவேண்டிய வீமராசன் அஃது இருப்பதாகக் கூறுவானேன்! இருதுபன்னன் தமயந்திக்கு அவாவித்தான் வந்திருக்கின்றான் என்பதை வீமன் ஒருவாறு ஊகித்திருந்தானென்பது உண்மையெனக் கொள்வோமாயின் அவன் இவ்விதம் உரைப்பது இயற்கையாம். கோசலநாட்டு அரசன் ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்ற விரைந்து வந்துளான். அரசன் எவ்வழி அவ்வழி குடிவழி, என்ற நியாயத்திற் கிணங்க, இதுவரையில் தத்தம் நிலையில் தாம்தாம் பிறழாது சீவகோடிகள் யாவும் அமைதியோடும் வைகிய கோசலநாடு, இவ்வரசன் ஆட்சிக்குள் வந்தவுடன் தன் தன்மைமாறி அமைதியையிழந்து யாவும் திரிதரப் புகுந்திருக்கவேண்டும்என்று ஊகித்து வீமன் இவ்விதம் அந்நாட்டை வருணித்திருப்பினும் இருக்கலாம். சாதாரணமாக நாட்டினுடைய தன்மையைத் தலைவன்மீது சார்த்துவது உள்ளுறை உவமையின் இலக்கணம். இங்கேயோ தலைவன் தன்மையை நாட்டிற்குச் சார்த்திப் பேசிய நுண்ணியதொரு நயத்தைக் காண்கின்றோம்.

இவ்வாறு நாம் அமைதிபெறப் பொருள் கொள்ளாமற் போனால், 'ஆமை முதுகில் அலவன் துயில் கொள்ளும் நாடு' என்று முன் புகழேந்தி உரைத்ததற்கும், 'வரிவண்டு பின்னையும் போய் நெய்தற்கு அவாவும் நெடுநாடு" என்று வீமன் உரைப்பதற்கும் முரண் ஏற்படும்.

சுயம்வரத்திற்குத் தான் வந்திருப்பதாகக் கருதியிருக்கும் இருதுபன்னனை, "நீ எதற்காக வந்தனை" என்று வீமன் வினவியபோது பதிற்சொல்ல முடியாமல் அவன் நாக்கு வறண்டுபோயிருக்கவேண்டும். இருப்பினும் இவன் உலர்ந்த வாயைச் சிறிது நனைத்துக்கொண்டு தாழாமல் பதிலுரைத்தான்.

---

இன்றுன்னைக் காண்பதோ ராதரவால் யானிங்ஙன்
மன்றன் மலர்த்தாராய் வந்தடைந்தேன்—என்றான்
ஒளியார்வேற் கண்ணாண்மே லுள்ளந் துரப்பத்
தெளியாது முன்போந்த சேய். 53.

பதப்பிரிவு:—இன்று உன்னை காண்பது ஓர் ஆதரவால் யான் இங்ஙன் மன்றல் மலர் தாராய் வந்து அடைந்தேன் என்றான் ஒளி ஆர் வேல் கண்ணாள் மேல் உள்ளம் துரப்ப தெளியாது முன்போந்த சேய்.

அன்வயம்:—ஒளி ஆர் மேல் கண்ணாள்மேல் உள்ளம் துரப்பத் தெளியாது முன்போந்த சேய், "மன்றல் மலர்த் தாராய், இன்று உன்னைக் காண்பது ஓர் ஆதரவால் யான் இங்ஙன் வந்து அடைந்தேன்" என்றான்.

பதவுரை

ஒளி - பிரகாசம்
ஆர் - பொருந்திய
வேல் - வேலைப்போன்ற
கண்ணாள்மேல் - கண்களையுடைய தமயந்தியின்பால்
உள்ளம் - கருத்தானது
துரப்ப - செலுத்த (அதனால்)
தெளியாது - ஆராயாமல்
முன்போந்த - முன்வந்த
சேய் - குமரவேள் அனைய இருதுபன்னன்,
"மன்றல் - வாசனை பொருந்திய
மலர் - மலர்களால் தொடுத்த
தாராய் - மாலையை அணிந்த வீமராஜனே,
இன்று - இன்றைக்கு
உன்னை - உன்னை
காண்பது - பார்க்கவேண்டுமென்றதாகிய
ஓர் - ஒரு
ஆதரவால் - விருப்பத்தால்
இங்ஙன் - இவ்விடத்தில் (அல்லது இவ்விதம்)
வந்து - வந்து
அடைந்தேன் - சேர்ந்தேன்"
என்றான் - என்று கூறினான்.

விரிவுரை:—நகரி பொன்றும் அலங்கரித்திருக்கப் பெறுமையாலும், 'எங்கு வந்தனை' என்று வீமன் கேட்ட கேள்வியாலும் பித்தன் தான் என்னகாரியம் செய்துவிட்டானென்பது இருபன்னனுக்கு வெட்டவெளியாயிருக்கும். ஒருவனிடத்தில் பணம் கடன் வாங்கிப்போகலாம்என்று வந்தவன், தான்வந்த காரியம் பயன்படாதென்பதைக் குறிப்பினால் தெரிந்துகொண்டுவிடுவானானால், 'நீ எங்கு வந்தாய்' என்று கேட்டதற்குப் பதிலாய், "ஒன்றுமன்று, சும்மா, உன்னைப் பார்த்துவிட்டு போகலாம் என்று வந்தேன், அவ்வளவுதான்" எனச் சொல்கின்ற மாநுட இயற்கைக்கும் பொருந்தியிருக்கின்றது இருதுபன்னன் இங்குச்சொல்கின்ற சொற்களும். திடீரென்று முன்பின் சொல்லாமல் தூதும் போக்காமல் ஒரு தேசத்தரசன் இன்னொருதேசத்தரசனைப் பார்ப்பதற்கு ஆசைப்பட்டு வந்துநின்றான் என்பது நம்பத்தகுந்ததன்று. ஆயினும் வேறு என்ன சொல்வான் பாவம் அயோத்திமன்னன். தன்பாகன் அருகில்இருந்திருப்பானால் அவன் முகத்தைத்தான் பார்க்கத் தரியாது தவித்திருப்பான்.

# யாப்பிலக்கணம்

[237-வது பக்கத் தொடர்ச்சி]

செய்யுள்—கலிப்பா

பன்னிரண்டாம் இதழில் ஆசிரியப்பாவின் இலக்கணமும் அதன் வகைகளையும் பற்றிக் கற்றோம். இனிக் கலிப்பாவிற்குரிய இலக்கணத்தையும் அதன் வகைகளையும் பற்றிக் கற்போம்:

கலிப்பாவுக்குரிய ஓசைதுள்ளல் ஓசை எனப்படும். இப்பாவில் எல்லாச்சீர்களும் கலந்து வருமாயினும், நிரையசையான் முடியும் இயற்சீரும், நேரசையை இடையிற் பெற்றுவரும் வஞ்சிச்சீரும், வெண்சீரும் ஏற்பனவாம். இவற்றுள் நிரையசை முதலில் வரும் வெண்சீர்கள் மிகுமெனக் கொள்க. இப்பாவில் கலித்தளையேயன்றிப் பிற தளைகளும் விரவி வரும். இப்பா நாற்சீரானமைந்த அளவடியால் நடைபெறும். இப்பாவின் வகை பத்தாம். அவை 1. நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா, 2. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, 3. வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, 4. தரவு கோச்சகக்கலிப்பா, 5. தரவிணைக் கோச்சகக் கலிப்பா. 6. சிஃறாழிசைக் கோச்சகக் கலிப்பா, 7. பஃறாழிசைக் கோச்சகக் கலிப்பா, 8. மயங்கிசைக் கோச்சகக் கலிப்பா, 9. வெண் கலிப்பா, 10. கலி வெண்பா என்பனவாம்.

இக்கலிப்பாவுக்குரிய உறுப்புகள் முதல் உறுப்பு எனவும், துணை உறுப்பு எனவும் இருவகைப்படும். முதலுறுப்பாவன, தரவு, தாழிசை என்னும் இரண்

டாம். துணையுறுப்பாவன, **தனிச்சோல்**, சுரிதகம், **வண்ணகம்**, அம்போதரங்கம் என்னும் நான்காம். இவற்றுள் எல்லா உறுப்பின் பொருளையுந் தொடுத்துக்கொண்டு தந்துமுன் நிற்பது தரவாம்; தரவில் தாழ்ந்து இறுவது தாழிசையாம்; ஒரு சொல்லாய்ப் பொருள் நிரம்பித் தனியே நிற்குந் தனிநிலையே தனிச்சொல்லாம்; ஓரிடத்தில் ஓடுகிற நீரானது, குழியாகிலும் திட்டாகிலும் சார்ந்த இடத்தில் சுரிந்து ஓடுவதைச் **சுரிந்து** என்றும் சுழி என்றும் வழங்குவது போலத்தான் கலியோசையால் வருகிறது வெள்ளையானும் ஆசிரியமானுமாய்த் தக்கதொரு பொருளை உட்கொண்டு நிற்பது சுரிதகமாம்.

**தரவும் தாழிசையும்** கலித்தளை வெண்டளை என்னும் இருதளைகளும் விரவி அளவடி இரண்டும் இரண்டின் மிக்கும் பெற்று நடைபெறும். **தரவு, எருத்தம்** என்பன ஒரு பொருளன. **தாழிசை**, இடைநிலைப் பாட்டு என்பனவும் ஒரு பொருளன.

**வண்ணகம்** என்பது, அளவடி முதலாக எல்லா அடியானும் நான்கடியிற் குறையாமலும் எட்டடியின் மிகாமலும் வருமெனக் கொள்க. **வண்ணகம், முடுகியல், அராகம், அடுக்கியல்** என்பன ஒரு பொருளன.

**அம்போதரங்கம்** என்பது, கரை சாரக் கரை சார ஒரு காலைக்கு ஒருகால் சுருங்கி வரும் நீர்த் தரங்கம் போல நாற்சீரடியும், முச்சீரடியும், இருசீரடியுமாகப் **பேரெண், அளவெண், இடையெண், சிற்றெண்** எனும் நான்குறுப்போடு வருவது. அவற்றுள் அளவடி ஈரடியாக இரண்டு வருவது **பேரெண்ணும்**; அளவடி ஓரடியாக நான்கு வருவது **அளவெண்ணும்**; சிந்தடி ஓரடியாக எட்டு வருவது **இடையெண்ணும்**; குறளடி ஓரடியாகப் பதினாறு வருவது **சிற்றெண்ணும்**. இவற்றுள் எட்டும் பதினாறுமாக வரும் இடையெண்ணும் சிற்றெண்ணும் சுருங்கி நான்கும் எட்டுமாய் வரவும் பெறுமெனக் கொள்க. (அம்போதரங்கம் - நீரில் தோன்றும் அலை) பேரெண்முதலியவை **அசையடி, பிரிந்திசைக் குறள், சொற்சீரடி** எனவும் வழங்கப்படும்.

**சுரிதகம்** என்பது ஒரு செய்யுளில் மேற்கூறிய வற்றுள் வரவேண்டுவனவாகிய உறுப்புகளை வருவித்து, ஒரு சீரால் அமைந்த தனிச் சொல்லும் வந்தபின், மூன்றடி முதலாகப் பல அடியால் வரும் அகவலாம். ஒவ்வோரிடத்துச் சுரிதகம் வெண்பாவானும் அமையும். **சுரிதகம், சுழியம், அடக்கியல், வாரம், வைப்பு, போக்கியல்** என்பன ஒரு பொருளன.

1. **நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா:**—ஒரு தரவும் மூன்று தாழிசையும், தனிச் சொல்லும், சுரிதகமும் உறுப்பாகப் பெற்று நடைபெறுவது நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா எனப்படும்:

**(a) நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா**

**(தரவு)**

**வாணெடுங்கண் பனிகூர**
**வண்ணம்வே றுய்த்திரிந்து**
**தோணெடுந் தகைதுறந்து**
**துன்பங்கூர் பசப்பினவாய்ப்**
பூணெடுங்கு முலைகண்டும்
பொருட்பிரிதல் வலிப்பவோ.

**(தாழிசை)**

சூருடைய கடுங்கடங்கள் சொலற்கரிய என்பவால்
பீருடைய நலந்தொலையப் பிரிவாரோ பெரியவரே?
சேணுடைய கடுங்கடங்கள் செலற்கரிய என்பவால்
நாணுடைய நலந்தொலைய நடப்பாரோ நலமிலரே?
சிலம்படைந்த வெங்கானம் சிறிலவே யென்பவால்
புலம்படைந்தநலந்தொலையப் போவாரோ பொருளிலரே

**(தனிச்சொல்)**

எனவாங்கு,

**(சுரிதகம்)**

அருளேனு மிலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னெடுந் தேரொடுந் தானையிற் பொலிந்தே.

இஃது ஆசிரியச் சுரிதகத்தால் முடிந்த நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா.

**(b) நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா**

**(தரவு)**

முத்தொடு மணிதயங்கு முக்குடைக்கீழ் முனிவனாய்
எத்திசையும் பல்லுயிர்க ளின்புற வினிதிருந்து
பத்துறு காவதம் பகைபசி பிணிநீங்க
உத்தமர்கள் தொழுதேத்த ஒளிவரை செலவினோய்!

**(தாழிசை)**

எள்ளனைத்து மிடரின்றி
எழில்மாண்ட பொன்னெயிலின்
உள்ளிருந்த உன்னையே
உயிர்த்துணையென் றடைந்தோரை
வெள்ளில்சேர் வியன்காட்டுள்
உறைகென்றல் விழுமிதோ?
குணங்களின் வரம்பிகந்து
கூடிய பன்னிரண்டு
கணங்களும்வந் தடியேத்தக்
காதலித்துன் னடைந்தோரைப்
பிணம்பிறங்கு பெருங்காட்டில்
உறைகென்றல் பெருமையோ?
விடத்தகைய வினைநீக்கி
வெள்வளைக்கைச் செந்துவர்வாய்
மடத்தகைய மயிலனையார்
வணங்கநின் னடைந்தோரைத்
தடத்தகைய காடுறைக
என்பதுநின் தகுதியோ?

**(தனிச்சொல்)**

எனவாங்கு,

**(சுரிதகம்)**

**எனைத்துணைய யாயினு மாகமற் றுன்கண்**
**தினைத்துணையுந் தீயவை யின்மையிற் சேர்தும்**
**வினைத்தொகையை வீட்டுக வென்று.**

இது நான்கடித் தரவும், மூன்றடித் தாழிசையும், தனிச்சொல்லும், வெள்ளைச் சுரிதகமும்பெற்று முடிந்த நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா.

---

**அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.**



# காற்று மழை

## Shakespeare—"The Tempest"

அங்கம் 1. களம் 2.

[230-வது பக்கத் தொடர்ச்சி]

**ப்ராஸ்ப்பீரோ:**-ஓகோ, அப்படியோ அவள்?(1) யாவதாயிருந்தாய் என்பதை நீ மறக்கமறக்க முன் மாதமொருமுறை நான் எடுத்தெடுத்துச் சொல்லவேண்டும். பாழுமிச்சூனியகாரி ஸைகொராக்ஸ், (2) நானாவித தீமைகளுக்காகவும், மக்கள் செவிளைச் சார்வதற்கும் அடுக்காத கொடிய சூனியங்களுக்காகவும் ஆர்ஜியரிலிருந்து (3) அகற்றப்பட்டாள். இதனை அறிவாய் நீ. அவள் செய்த ஒன்றின் பொருட்டு அவளது உயிரினை வாங்காது விட்டனர் அவர் (4). இது உண்மையன்றோ?

**ஏரியல்:**—ஆம், ஐயா.

**ப்ராஸ்ப்பீரோ:**—கருப்பத்தோடு அந் நீலக்கண் கிழம் இவ்விடம் கொணரப்பெற்றாள் (5). மாலுமிகள் அவளை இங்கு விட்டுச் சென்றனர். நீயே விளம்பிக்கொள்ளும் வண்ணம் என் அடிமையாகிய நீ அப்பொழுது அவளுக்கு ஏவலாளனாயிருந்தனை (6). மண்ணிற்கே இயன்றதாகி (7) அருவருப்பதற்குரிய அவள் கட்டளைகளை நடத்துவதற்கு ஒவ்வாதவோர் நுண்மைவாய்ந்த ஆவி நீயாதலின், (8), அன்னவள் ஆக்கினைகளை மறுத்திட, வலிமிகவுடைய தன் மற்ற ஊழியர்களின் உதவிகொண்டு, தணியாத தன் வெஞ்சினத்தால் உன்னை யோர் பிளவுடைப் பனைமரத்துள் அடைத்துவிட்டாள். (9). ஆண்டோர் பன்னிரண்டு அப்பிளவினுள் சிறைப்பட்டு நீ கிடந்தாய். அக்கால அளவிற்குள், உன்னை அவ்விடமே விட்டுவிட்டு, அவள் மாய்ந்தாள். (10). அங்கிருந்து நீ, எந்திரச் சக்கரங்கள் உராய்வதனினும் வேகமாய் மறுகும் உன் புலம்பல்களைப் போக்கியிருந்தனை, (11) அப்பொழுது இத்தீவு, இங்கு அவள் ஈன்ற அப்பிள்ளை தவிர, - குரூரக்கிழத்தின் வயிற்றுச் சொறிநாய்க்குட்டி அது-மானுட வுருவத்தின் பெருமைபெற்றதில்லை (12).

**ஏரியல்:**—ஆம், காலிபன் அவள் பிள்ளை.

**பிராஸ்ப்பீரோ:**—ஏ, மந்தி நான்தான் சொல்கின்றேனே. (13) அவன்தான், இப்பொழுது என் வேலையில் வைத்துக்கொண்டிருக்கின்ற அந்தக் காலிபன்,-எத்தகைய வேதனையில் நீ யிருக்க யான் கண்டேன் என்பதை நீயே நனியறிவாய்; நின் மறுகல்கள் கோனாய்களை ஊளையிடச் செய்தன, என்றுஞ் சினமறுக் கரடிகளின் மார்பினை ஊடுருவிச் சென்றன; நிரயத்திற் காளாகியவர்மீது நிறுவதற்குரிய வேதனையன்றோ அது. மறுபடி அதனை ஸைக்கொராக்ஸ் மாற்றமாட்டாதவளாயினாள். நான் இங்கு வந்து உன் வருத்தத்தைக் கேட்டபோது, அப்பனைமரம் அங்காந்து உன்னை வெளியேவிடச் செய்தது என்னுடைய கலைவன்மையே (14).

**ஏரியல்:**—தலைவ, நினக்கு வந்தனம்.

**ப்ராஸ்ப்பீரோ:**—இனி நீ முணுமுணுப்பாயாயின், **கருங்காலி மரத்தைக்கிழித்து, பன்னிரு மாரிநீ ஊளையிட் டொழிக்கும்வரை அதன் கணுவுடைக் குடர்களில் உன்னைக் கடாவி விடுவேன்.**

1. அவளைப்பற்றி உனக்கு இவ்வளவேனும் நினைவு இருக்கின்றதா?—என்று ஏரியலைப் பரிகசிக்கின்றான்.

(2) 'இழைத்த' என்னும் ஒரு சொல் இங்குத் தொக்கிருக்கின்றது.

(3) தன் மந்திரத்தால் சனங்களுக்குப் பலவித தீமைகள் செய்ததற்காகவும், கேட்பதற்கும் பயங்கரமான மிகக் கொடிய சூனியங்கள் வைத்ததற்காகவும் இவளை ஆர்ஜியரிலிருந்து துரத்திவிட்டார்கள்—என்பது பொருள்.

(4) இவள் செய்த ஏதோவொரு நல்ல காரித்தைக் கருதி இவளைக் கொல்லாமல் துரத்திவிட்டனர்—என்பது பொருள்.

(5) ஸைக்கொராக்ஸை இத்தீவில் கொணர்ந்துவிட்டபோது அவள் கருப்பமுற்றிருந்தாள்—என்பது பொருள்.

(6) இப்பொழுது என் அடிமை நீ என்று சொல்லிக் கொள்கின்றாய்; அப்பொழுது ஸைக்கொராக்ஸின் ஊழியனாக இருந்தாய்—என்பது பொருள்.

(7) மண்ணிற்கே இயன்றதாகிய கட்டளைகள்—உயரிய நோக்கமின்றி மிகவும் இழிவான காரியங்களைச் செய்யும்படி அவள் ஏவிய கட்டளைகள். அவை அருவருக்கத்தக்கனவும் ஆம்.

(8) நுண்மை வாய்ந்த ஆவிநீ மற்ற ஆவிகளைப்போல் முரட்டுத்தன்மை வாய்ந்தவனல்லை நீ, மென்மையான குணங்கள் வாய்ந்தவன். ஆதலால் அவள் இட்ட கட்டளைகளைச் செய்ய நீ ஒவ்வவில்லை.

(9) நீ மறுத்ததற்குத் தண்டனையாகத் தன் ஏவலில் இருந்த மற்ற ஆவிகளைக் கொண்டு உன்னை ஓர் பனைமரப் பிளவில் சிறையடைத்துவிட்டாள்.

(10) நீ அங்குப் பன்னிரண்டு ஆண்டுகள் சிறைக் கிடந்தாய், அதற்குள் அவளும் இறந்துவிட்டாள்.

(11) எந்திரத்தின் சக்கரங்கள் சுழலும்போது ஒன்றோடொன்று இடைவிடாமல் உராய்வதுபோல், நீயும் அப் பனைமரத்தின் பிளவிற்கிடந்து மறுகி மறுகி இடைவிடாமல் புலம்பிக்கொண்டிருந்தாய்—என்பது பொருள்.

(12) அப்பொழுது இத்தீவு மானுட வுருவத்தின் பெருமை பெற்றதில்லை. என்று கூட்டிக்கொள்க—மனிதர் ஒருவரும் இத்தீவில் வசித்ததில்லை என்பது பொருள்.

எனினும், கருப்பமுடன் இங்கு விடப்பட்ட ஸைக்கொராக்ஸ் பெற்ற ஒரு பிள்ளை ஒன்று இருந்தது. அதனை மனிதன் என்று சொல்வதற்கியலாது. சொறி பிடித்த ஒரு குட்டி நாய் என்றே அதனைக் கூறவேண்டும்—என்பது பொருள்.

(13) ஏ மந்தபுத்தி யுடையவனே, நான்தான் சொல்கின்றேனே, எதற்கு நீ கூடக்கூடப் பேசவேண்டும்—என்பது இதன் பொருள்போலும்.

(14) ஸைக்கொரக்ஸ், உன்னை வைத்த அக்கொடிய துன்பத்தினின்று உன்னை விடுவிக்கக் கூடாதவளாக, நான் வந்தபின் அன்றோ என்னுடைய மந்திர பலத்தினால் உன்னை விடுவித்தேன்—என்பது பொருள்.

அவள் இறந்துவிட்டபடியானால் மாற்றமாட்டாதவளாயினளோ, அல்லது, மாற்றுதற்குரிய மந்திரம் போதாமையாலோ—என்பது விளங்குவதின்றி இரண்டிற்கும் பொருந்தும்படி இவ்வுரை நிகழ்கின்றது.

**நரகத்தில் வீழும்படி சபிக்கப்பட்டவர்களுக்கே உரிய வேதனைக்கு ஏரியல் ஆளாயிருந்தான்.**

8914

## கலாநிலயச் சொல்லூடாட்டம் 14.

**இடம்—வலம்**

1. ஓர் நதி.
4. அமைதி.
6. மழை.
7. துன்பம்.
9. ஓர் மாதம்.
11. பாஞ்சால தேசத்து அரசன்.
13. மரம்.
14. வணங்கு.
15. சங்கு.
16. காமதேவன்.
18. நக்ஷத்திரம்.
20. யானைகள்.
22. குளிர்ச்சியான.
23. புழுதி.
25. ஆகாயம்.
26. வறள.
27. முருகக் கடவுளின் படைவீடுகளில் ஒன்று.
29. ஓர் முனிவன்.
31. குறை.
32. உதயகாலம்.
33. இளையவன்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | 1 | | 2 | ■ | 3 | ■ | 4 | | 5 |
| 6 | | ■ | 7 | | | 8 | | ■ | |
| 9 | | 10 | | ■ | 11 | | | 12 | |
| ■ | 13 | | ■ | 14 | | ■ | 15 | | ■ |
| 16 | | | 17 | | ■ | 18 | | ■ | 19 |
| | ■ | 20 | | | 21 | | ■ | 22 | |
| 23 | 24 | | ■ | 25 | | ■ | 26 | | |
| ■ | | ■ | 27 | | | 28 | | | |
| 29 | | 30 | | ■ | 31 | | ■ | | ■ |
| | ■ | 32 | | | | ■ | 33 | | |

**மேல்—கீழ்**

1. நகைத்தான்.
2. ஓர் தானியம்.
3. ஓர் உறவினள்.
4. சிவன்.
5. வலிமை.
6. ஓர் மாதம்.
8. மரம்.
10. இலக்குமி.
12. கால்விலங்கு.
14. குறைவான்.
16. ஓர் மரம்.
17. மழைத்துளி.
18. திரும்பு.
19. மேகம்.
21. பதனழிதல்.
22. ஓர் ஆரணியம்.
24. கை.
26. ஓர் மீன்.
27. கண்ணில்லாதவள்.
28. படகு.
29. தோத்திரம்.
30. பூமி.

### கடைசி நாள்:—1933-வது வருடம், மே மாதம், 8 தேதி.

பரிசு:—கலாநிலயம், 1928, 1930, 1931, 1932 ஆகிய இவ்வருடங்களின் யாதாவது ஒன்றன் ஆப் லெதர் - கில்ட் பைண்ட் புத்தகம் ஒன்று; அல்லது இவ்வருடமேனும் அடுத்த வருடமேனும் ஒரு வருடத்திற்கு நம் பத்திரிகையை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

1. இந்தக் கட்டங்கள் மாதிரியாகவே வேறோர் காகிதத்தில் வரைந்துகொண்டு அதனில் விடையை எழுதி யனுப்பவும்.

2. அவ்வாறு அனுப்புபவர், அதனோடு நாலணாவுக்குக் காலணாத் தபால் தலைகள் (பதினாறு) அனுப்புதல் வேண்டும். இலங்கை வாசிகள் அவ்வூர்த் தபால் தலை 25 சதம் அனுப்பலாம். மலேயா தேசத்தவர் எட்டணா பெறுமான போஸ்டல் ஆர்டர்கள் அனுப்புதல் வேண்டும்.

3. பிழையற நேரிய விடைகள் அனுப்பியவர்களுடைய பேர்களை எல்லாம் சீட்டுக் குலுக்கிப் போட்டு யார் பேர் வருகின்றதோ அவர் ஒருவருக்கு மட்டுமே பரிசு அளிக்கப்படும்.

4. இவ்வண்ணம் அவ்வவ் முறை பரிசு பெற்றவர்கள் தவிர, நேரிய விடைகள் ஆறு சொல்லூடாட்டங்களுக்குத் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்கள் பெயர்களை யெல்லாம் மற்றுமோர் முறை சீட்டுக் குலுக்கிப் போட்டு அதனில் பெயர் வருகிற ஒருவருக்கும், மேல் குறித்த வருடங்களின் யாதாவது ஒன்றன் தொகுதி இதழ்கள் பைண்ட் செய்யாமல் பரிசாக அளிக்கப்படும். இதுகாறும் நேரியவிடைகள் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்களும் இப் பரிசிற்கு உரியவராவார்.

5. சொல்லூடாட்டங்களைப் பற்றிய எல்லா விடயங்களிலும் மானேஜர் செய்கின்ற தீர்மானமே முடிவானது. இவைகளைப்பற்றி எவ்விதக் கேள்வியும் எழுதலாகாது.

6. இந்தப் போட்டியில் நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.

விடைகளை **மானேஜர், கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை.** என்னும் விலாசத்திற் கனுப்பவும்.

---

### கலாநிலயச் சொல்லூடாட்டம் நம்பர் 13. விடையும் முடிவும்

நேரான விடை:—

இடம்—வலம்:—2. சம்பா; 4. அகம்; 6. பங்குனி; 8. தமாலம்; 10. கரு. 11. ககனம்; 13. தரித்திரம்; 15. புதன்; 17. தணிவு; 19. வைகை. 21. கருதுவது; 24. தகாதவர்; 27. உரம்; 28. இத்திப்பு; 30. போழ்ந்த; 31. பரிதி; 33. தந்தி; 34. துன்பம்

மேல்—கீழ்:—1. சங்கரி; 2. சனி; 3. பாதகம்; 4. அலம்பு; 5. கம்; 7. குருத்து; 9. மான; 11. கரவு; 12. வான்; 13. தவ்வை; 14. திணிர்த; 16. தலைவ; 18. குரு; 20 கைதர; 21. கர்த்தன்; 22. துடைப்பம்; 23. துதி; 25. காம்போதி; 26. வதிந்து; 27. உந்த; 29. புரி. 32. அலை.

நேரிய விடை அனுப்பியவர்:—PL. PR. சுப்ரமணியம் செட்டியார், கண்டவராயன்பட்டி; T. மயில்வாகனம், யாழ்ப்பாணம்; V. மீனாக்ஷிசுந்தரம் ஐயர், பெரையூர்; K. அல்லாபிச்சை, கோம்பை. S. சந்தானகோபால ஐயர், கண்டாச்சிபுரம்; A. சுருளியாண்டி, கோம்பை. R. திருமலைநக்கையா, கோம்பை; C. M. நமசிவாயம், கோம்பை; P. K. இராமலிங்கம் செட்டியார், பண்ணுருட்டி; A. கனகசபைப்பிள்ளை, கனுத்ரா; K. வேலுப்பிள்ளை, பேராதனை; A. இராமுப்பிள்ளை; நாய்னதீவு; V. R. கந்தசாமிப்பிள்ளை, V. R. சாரங்கபாணி, U. V. இராஜலக்ஷ்மி U. N. அழகர் சாமி நாயுடு, U. S. நாராயண ஐயர், L. இராஜாமணி ஜோஸப், K. ஸ்ரீநிவாசன், S. M. எசோதையம்மாள்—உடுமலைப் பேட்டை.

பரிசு பெற்றவர்:—திரு. A. சுருளியாண்டி, கோம்பை. ஆறு சொல்லூடாட்டங்களுக்குத் தொடர்ச்சியாக நேரியவிடை யனுப்பியவர். (1) திரு. A. சுருளியாண்டி, கோம்பை. (2) ஸ்ரீமதி. U. V. இராஜலக்ஷ்மியம்மாள், உடுமலைப்பேட்டை. இவர்களில், திரு. A. சுருளியாண்டி அவர்களுக்கு இச்சொல்லூடாட்டப் பரிசு கிடைத்தபடியால், மற்றையபரிசு ஸ்ரீமதி இராஜலக்ஷ்மியம்மாளுக்கு அளிக்கப்பெற்றது.




## கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**—அறியாமை வேண்டப்படும் 4. சயநலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையின் மருமை 4. மறப்பது முறுதியாமே. கள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

**களவியற் காரிகை:**—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டணைக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

## — பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

### தமிழகராதி ஆதார நூற்றொகுதி நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

### அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

### கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

### திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும் (வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு 0-12-0

### களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொருளிலக்கண நூல்; முதன்முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களை யுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

### நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

### இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

### தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L., விலை அணு 0-6-0

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.



## திராவிடப் பிரகாசிகை

இந்நூல் தமிழின் மாட்சியையும் அதன் இலக்கண இலக்கியங்களின் விவரங்களையும், தமிழின் தெய்வப் பழமை மரபியல், ஒழிபியல் இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், என்னும் ஐம்பெரும் பகுதிகளால் நன்கு விளக்குவது. சமீபகாலத்திற் றோன்றிய "தென்மொழி வரலாறு," "தமிழ் வரலாறு" முதலிய புதுநூல்களுக்கு வழிகாட்டியாயுள்ளது. தமிழ்ப்பண்டிதர்களுக்கும், மாணவர்களுக்கும் நற்பயன் விளைக்கக் கூடியது. புத்தகசாலை, வாசக சாலைகளுக்கும் இன்றியமையாதது. இது, திருவாவடுதுறையாதீன மகாவித்துவாஞய் விளங்கிய யாழ்ப்பாணத்து வடகோவை-சபாபதி நாவலரவர்களால் இயற்றப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு அழகுபெற டெம்மி எட்டுப்பக்கங்கொண்ட ரு௲ பாரங்களாக நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இப்பதிப்பின் விசேஷங்கள்:—தமிழ் ஆங்கில முன்னுரை, நூலாசிரியர் சரித்திரம், மேற்கோள் விளக்கம், கடினசந்தி நீக்கம், அச்சுப் பிழையின்மை முதலியன. வேண்டுவோர் கீழ்க்குறித்த விலாசங்களுக்கு எழுதவும்:— விலை ரூ 3-8-0.

1 காரியதரிசி, மலைய சைவசித்தாந்த சங்கம், துவாலாலம்பூர்.

2 ஜோதிடவிலாச புத்தகசாலை, கோக்குவில் யாழ்ப்பாணம்.

3 சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை, 20, காரணேசுரர்கோயில்தெரு, மயிலாப்பூர், சென்னை.



## ANCIENT JAFFNA

**MUDALIAR C. RASANAYAGAM c. c. s.**

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European. Professor S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

**PRICE Rs. 5-8-0.**

KALANILAYAM
Purasawalkam, Madras.




## வர்த்தமானம்

**திவான் பகதூர் P. கேசவபிள்ளை:**—திவான் பகதூர் P. கேசவபிள்ளை சென்றவாரம் காலஞ்சென்றார். அவருக்கு இப்பொழுது வயது 73. அவர் நீண்ட காலமாகப் பொதுஜன சேவையில் ஈடுபட்டு உழைத்து வந்தவர். அவர் அரசியலில் சிறிது மிதவாதக் கொள்கையுடையவர். சிறைச் சீர்திருத்த விஷயமாகவும் தென்னாப்பிரிக்காவில் இருக்கும் இந்தியர்களுக்காகவும் அவர் அதிகம் உழைத்துள்ளார். அவரது குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும்எமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

***

**வெள்ளைக் காகிதம்:**—சைமன் கமிஷனுடன் பின் கூடிய மூன்று வட்டமேஜைக் கூட்டங்களின் பயனாக முடிவு செய்யப்பட்ட இந்திய அரசியல் திருத்தத் திட்டம் வெளியிடப்பெற்றது. அதுவே வெள்ளைக் காகிதம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. அதன்படி இந்தியாவில் மஹாண சுயாட்சி ஏற்படும். மாகாணங்களைப்பற்றிய சகல நிர்வாகமும் மந்திரிகளினிடமேயிருக்கும். தற்கால ஏற்பாடாகச் சிலகாலம்வரை, தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கும், ஜனத்தொகைக் குறைவுடையவகுப்பாருக்கும் தனிப்பிரதிநிதித்துவம் அளிக்கப்பெற்றிருக்கின்றது. மத்திய அரசாங்கத்தில் இராணுவம் பணம் சம்பந்தமான இலாக்காக்கள் மந்திரிகளின் நிர்வாகத்தில் இரா. சுதேச மன்னர் நாடுகளின் சம்பந்தமும் மத்திய சட்டசபைக்கு அளிக்கப்படவில்லை. எனவே இது பிடரல் முறைக்கு உரியதன்றென்றும், வகுப்புப் பிரதிநிதித்துவம் ஐக்கிய முறையை நல்காதென்றும், கவர்னர் ஜெனரலுக்கு அதிகமான அதிகாரம் அளிக்கப்பெற்றிருக்கின்றதென்றும், இந்தியத் தலைவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

***

**வேலையில்லாதாருக்கு உதவி:**—சமீபத்தில் கூடிய வங்காளச் சட்டசபையில், வேலையில்லாதாருக்கு உதவி தருவதற்காக ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கி வைக்கப் பெற்றிருக்கின்றது என்று வங்காளச் செய்தி கூறுகின்றது.

***

**இராட்டூர் வீரன்:**—அல்லது துர்க்காதாஸ் என்னும் பெயருடைய நடாகநூல் ஒன்று, பாரதி பிரசாலயத்திலிருந்து வரப்பெற்றோம். இது காலஞ்சென்ற துவிஜேந்திரலால் ராய் என்னும் வங்காள அறிஞரால் இயற்றப்பட்ட நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். மொகலாய மன்னரான அவுரங்கசீப் தமது மனைவியான குல்நார் பீகத்தின் இஷ்டத்தை நிறைவேற்றி வைப்பதற்காக மீர்வாரத்தின்மீதும், பின் மார்வாரத்தின்மீதும் படையெடுத்ததும், அப்படை யெடுப்பில் நிகழ்ந்தனவைகளும், இராஜபுத்திர வீரர்களும் துர்க்காதாஸ் என்னும் ஒரு சிறந்த வீரனும் மார்வாரத்தையும் மீர்வாரையும் காத்ததும் இந்நாடகத்தின் அடிப்படையான கதை. இந்நாடகத்தைப் படிப்பவர் துர்க்காதாவின் பெருந்தகைமையைக் கண்டு வியப்பர். அத்துர்க்காதாவின் வீரர்களில் ஒருவனை காஸிம் முல்லா என்னும் முகமதியனது பெருமையும், எஜமான விச்வாஸமும் படிப்பவர் மனதை உருக்கிவிடும் தன்மையன. இந்நாடக நூலின் விலை $1\frac{1}{2}$ ரூபாய், வேண்டுவோர் பாரதி கார்யாலயம், உத்தமபாளையம். மதுரை ஜில்லா என்னும் விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

***

**காரணம் எதுவாயினும் நன்றே:**—ஒட்டமன் ராஜ்யத்தின் தலைநகரான அட்ரியாநோபல் என்னும் நகரத்தில் எவரும் மோட்டார் வண்டியிற் செல்லலாகாதென்று அரசாங்கத்தார் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனராம். உள்நாட்டு வண்டிக் கைத்தொழில் அபிவிர்த்தியையும், உள்நாட்டில் விளையும் கொள்ளின் வியாபாரத்தையும் உத்தேசித்து இவ்வாறு செய்யப்பெற்றதாம். இந்த அரசாங்கத்தாரின் சுதேசாபிமானத்தை ரயில்வேமாகவின் கொண்டாடுகின்றது. காரணம் எதுவாயினும், நகரில் மோட்டார் ஓடாதிருப்பின், மாந்தரிடம் இப்பொழுது காணப்படும் அவசரம் சிறிது குறைவுபடுமாதலால் இது போற்றுதற்குரியதேயாகும். கால் நடையாய்ச் செல்பவர்களுக்கும் நலமுண்டு.

***

**சைகோன் நிலை:**—சைகோன் என்னும் பிரஞ்சுத் தீவில் உள்ள நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருக்கின்றனராம். கடன்காரர்களினிடமிருந்து செட்டியார்கள் 100-க்கு 30 வீதம்தான் வசூல் செய்யவேண்டு மென்றும், அதற்குமேல்அவர்கள் வசூல்செய்தால் நாடு கடத்தப்படுவார்கள்என்றும் பிரஞ்சு அரசாங்கத்தார் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனராம். சைகோனில் உள்ள பாங்குகளிலும் கூட்டுறவுச் சங்கங்களிலும் செட்டியார்களின் பணம் இருக்கின்றது. அவைகளையும் பாங்குகளும் சங்கங்களும் கொடுக்க மறுக்கின்றனவாம்.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்




| டானிக்குகள் : | |
|---|---|
| பாதாமி லேகியம் | ரூ. 3-0-0 |
| ரதிவல்லப லேகியம் | 2-0-0 |
| மஹா திராக்ஷாதி லேகியம் | 2-0-0 |
| குழந்தைகளுக்கு | |
| ஸ்ரீகா கஸ்தூரி மாத்திரை | 0-4-0 |
| பால சஞ்சீவினி | 0-4-0 |
| பால ஸுதா (டானிக்) | 1-0-0 |

| தைலங்கள்: | | |
|---|---|---|
| சந்தனாதி | 6 அவுன்ஸ் ரூ. | 1-0-0 |
| அமிர்தாமலக | ,, | 0-12-0 |
| பிருங்காமலக | ,, | 0-12-0 |
| ஸ்திரீகளுக்கு | | |
| ஸுதக டானிக் | | 2-0-0 |
| கர்ப்பாசய டானிக் | | 2-0-0 |
| ப்ரஸவ லேகியம் | | 1-8-0 |

சுமார் 300 போலிகள் ஏமாற்றும். ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை "நஞ்சன்கூடு பல்பொடி" சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) ம.ட.டீ.மெடிகேடட்-டப்பி தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

ம.ட.ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

காஸ்ட்ராலகஸ்

ஜ்வரேக்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
Reg. No. M. 2324.


## — கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு
முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.

ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

| | | | | |
|---|---|---|---|---|
| பால காண்டம் ... ... ... ... | ரூ. | 5 | 0 | 0 |
| அயோத்தியா காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| ஆரணிய காண்டம் ... ... ... ... | ,, | 4 | 0 | 0 |
| கிட்கிந்தா காண்டம் ... ... ... ... | ,, | 4 | 8 | 0 |
| சுந்தர காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| யுத்த காண்டம்—2 பாகம் ... ... ... ... | ,, | 10 | 0 | 0 |

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— **கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.**

---

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம்,
சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில்
எங்கள் பிரசித்திபெற்ற

### ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

---

ஆறெழுத்தந்தாதி:—அகத்திய முனிவர் அருளிச் செய்த இவ் வாறெழுத்தந்தாதி முருகக் கடவுளை முழுமுதற் கடவுளாக உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தைத் தன்னுள் அடக்கியதென்று கருதப்படுகின்ற 100 செய்யுள்களைக் கொண்ட நூல். இது டாக்டர் V. S. அருணசலம் பிள்ளை யவர்களின் உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை அணா 12. தபால் செலவு வேறு.

பெருமாள் திருமொழி:—(குலசேகராழ்வார் திருவாய் மலர்ந்தது.) ஸ்ரீமான் பு. ப. இரத்தின சபாபதி நாயகர் அவர்கள் இயற்றிய பதவுரை, இலக்கணக் குறிப்பு சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்த்தது. நாலாயிரப் பிரபந்தம் பயில விரும்புவோர்க்கு இது மிகுந்த உதவி தரும். விலை:-கலிகோ 1-4-0, சாதா 1-0-0. தபால் செலவு வேறு.

கலாநிலயம்
வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

---

**NATIONAL INSURANCE COMPANY, LIMITED.**
Head Office :
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

New Business Completed During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security { for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

**FIRE & ACCIDENT RISKS**
**covered by**
**NATIONAL FIRE**
AND
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*


**Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)**